
# கிராந்தனாக

அறிந்து பரப்பி ஆக்கம் செய்குவோம்

செப்டம்பர் 2002

நன்கொடை ரூ. 5



ஸ்தாபகம் : 1973 ✆: 226065

# ஞானம் ஆனந்த்

## லைட் & ஹெவி டிரைவிங் ஸ்கூல்

(அரசு அங்கீகாரம் பெற்றது)

**No. 2 ரோடு கல்லறைதோப்பு தெரு,**
**மயிலாடுதுறை - 609 001.**



கடந்த 25 ஆண்டுகளுக்கும் மேலாக கார், மாருதிகார், லாரி, மோட்டார் சைச்கிள் போன்ற வாகனங்களில் "சிறந்த முறையில்" ஓட்டுனர் பயிற்சி அளித்து ஓட்டுனர் உரிமம் பெற்று தரும கைராசி ஸ்தாபனம்

Prop : G.ரவிசங்கர், G.ரகுராமன் D.A.E

குறிப்பு : **பெண்களுக்கு மாருதிக்காரில் சிறப்புப் பயிற்சி அளிக்கப்படும்**

---

First Drive-in Restaurant in Mayiladuthurai.

# HAPPY VILLA RESTAURANT



## INDIAN, CHINESE, TANDOOR

Quality foods
at
lower cost !!

ONCE YOU CAN VISIT.



பாரதி!
நீ தமிழுக்கு மட்டும்
சாரதியல்ல .....
கோடானகோடி மக்களின்
எழுச்சிக்கும் நீ தான்
காரணி - நீ
இன்று எங்களோடு
இல்லையென்றாலும் - உன்
தமிழோடு,
உன் நினைவுகள்
எங்களோடு
என்றும்
என்றென்றும்..........



## உங்களுக்காக காத்திருப்பவை

"சட்ட நுணுக்கங்களை விளக்கும் புதிய பகுதி......"
- திறவு கோல் (6)

"இன்னும் என்னதான் எதிர்பார்க்கிறார்கள் மாணவர்கள்...?"
-சர்வே (22)

"நகராட்சி" -சிறப்புப்பார்வை (29)

"காலேஜுக்கு 5 நிமிஷம் லேட்டா வந்தா, காலேஜ் முடிந்து 1 மணி நேரம் நூலகத்தில் படிக்கணும்....."
-இளன்,ஆசி,வாசி. (41)

"கட்சித் தாவினால்....." -சிட்டிசன் (48)

"ஜாக்கிரதை, உள்ளே......பின்லேடி!" (67)

"விவேக்கின் உதவியாளருக்கு அர்த்தம் தெரிந்து அவர் தனியாக சிரிக்கிறார்.....!
"-சிக்னல் (76)

"யோசிச்சிகிட்டே..... சிரிங்க!"
-ஆறு வித்தியாசங்கள் (66)

"தயக்கமின்றி தொடர்பு கொள்க" - (86)

"இருவருமே தலையில் சுடப்பட்டனர்......." (87)

"முன்னணிபேட்ஸ்மேன்கள் அனைவரும் சொற்ப ரன்களிலேயே அவுட்டாயினர், டெண்டுல்கரே சற்று நம்பிக்கையிழந்து அவுட்டாகியது போல்தான் இருந்தது."
- வியத்தகு வெற்றி (100)

ஒர் அறிவிப்பு: "அந்தப் பக்கத்தில் மழை பெய்கிறது! தயவு செய்து குடையுடன் செல்லவும்...." (109)

இன்னும் என்னென்னவோ, , ,

உங்கள் விரல்கள் தயாராகட்டும் , , ,

# இளந்தூது

| தூது 14 | அறிந்து பரப்பி ஆக்கம் செய்குவோம் | செய்தி 1 |
|---|---|---|

அந்நியர் நம்மை ஆட்சி செய்த போது அச்சமின்றி எதிர்த்தோம், 'தன்னலம் இல்லாமல் தாய் நாட்டைக் காப்போம்' என்று நம்மிடம் யாசித்தவர்கள், நம்மை அச்சுறுத்துகிறார்கள். சவப்பெட்டி முதல் பெட்ரோல் வரை எதையும் விட்டுவைக்கத் தயாராகயில்லை. தன் சுயநலத்திற்காக எத்தனைப் போராட்டங்கள் எத்தனை எத்தனை மதக்கலவரங்கள், பொம்மலாட்டம் போல் கடத்தல் நாடகங்கள். இவர்களா நம் தாய் நாட்டைக் திருநாடாக்கப் போகிறார்கள்?. இந்தியாவின் உயிர்நாடி இளைஞர்கள், விழித்தெழுந்தால் ஏன் ஒரு வரலாற்றைப் படைக்க முடியாது?.

தென்கோடியில் இருந்து உயர்ந்த இவர் அரசியல் வாதியல்ல, என்ன செய்யப் போகிறார் என்று வினவியவர்களுக்கு இவரது செயல்களே விடை. விஞ்ஞானமும், மெய்ஞானமும் ஒருசேரக்கலந்த இவருக்கு தன்னடக்கம், எளிமை, திறமை இவையே பலம். இனி வருபவர்கள் எவரும் முன்பு இருந்தவர்கள் போல் ரப்பர்ஸ்டாம்பாக இருக்க மாட்டார்கள் என்பதற்கு இவரே உதாரணம்.

**கலாம் வழியில் களம் இறங்கக் காத்திருக்கும் அனைவருக்கும் எங்களின் வாழ்த்துக்கள்.**

ஆசிரியர் குழு



# அன்பார்ந்த வாசகர்களுக்கு . . .

**இனிய வணக்கங்கள்,**

1989 ஆம் ஆண்டு பிறந்த இளந்தூவிற்கு இன்று வயது பதின்மூன்று. இன்னும் ஓரிரு நாட்களில் தன் பதினான்காம் அகவையை எட்டவிருக்கிறது. இத்தருணத்தில் இப்புதிய ஆசிரியர் குழுவின் . முதல் இதழ் மூலம் உங்களைச் சந்திப்பதில் மகிழ்கிறோம். கல்லூரிப் பொன்னேட்டில் தங்கள் பெயரைப் பொறிக்க வந்திருக்கும் முதலாம் ஆண்டு மாணவர்களுக்கு எங்கள் முதல் வணக்கம்.

எந்நேரத்திலும் எங்களுக்கு உறுதுணையாக இருக்கும் நம் கல்லூரி முதல்வர் முனைவர். **வி.இராதாகிருஷ்ணன்** அவர்களையும் எங்களது மதிப்பிற்குரிய முதல் ஆசிரியரான **திரு.ஏ.இசட்.இராதாகிருஷ்ணன்** அவர்களையும் இந்நேரத்தில் வணங்கி மகிழ்கிறோம். தொடர்ந்து தங்கள் மேலான ஆதரவை நல்கிவரும் விளம்பரதாரர்களுக்கு எங்கள் நன்றிகளை உரித்தாக்குகின்றோம். மேலும், **'அன்பறி வாரய்ந்த சொல்வன்மை தூதுரைப்பார்க் கின்றி யமையாத மூன்று'** என்பதை எங்களிடத்தில் வெளிப்படுத்திச் சென்ற எமது 13-ஆம் ஆண்டு ஆசிரியர்! **இரா.ரெ.விடுதலை, சு.நாராயணன், ஜெ.வினோத், ஹெ.அகஸ்டீன்விஜய், பா.இன்பநிலா, க.ஸ்ரீவித்யா** இவர்கள் அத்தனைபேர்க்கும் இவ்வினிய தருணத்தில் நன்றி கூறி அவர்களின் மேலான ஆதரவோடு இப்புதிய ஆண்டின் பணிகளைத் தொடங்குகிறோம்.

வழக்கம் போல் உங்கள் படைப்புகளால் இவ்விதழை அலங்காரம் செய்துள்ளோம். ஒரு பத்திரிகை நடத்துவதென்றால் எத்தனைச் சிரமங்கள் இருக்குமென்று உங்களுக்கே தெரியும். அச்சுக்கூலி, காகிதப் பொருட்கள் போன்றவைகளின் அளவுக்கதிகமான விலையேற்றத்தின் காரணமாக நன்கொடையை ரூபாய் 5-ஆக உயர்த்தி உள்ளோம். இதிலுள்ள சிரமங்களைப் புரிந்து கொண்டு தங்கள் ஆதரவைத் தொடர்ந்து நல்கிட வேண்டுகிறோம்.

இவ்விதழ் குறித்தத் தங்களின் ஆக்கப்பூர்வமான விமர்சனங்கள் எங்களை வந்தடையட்டும்.

-ஆசிரியர் குழு

நவீன ரெடிமேட்
ஆடைகளின் உலகம்

எஸ்கொயர்
ரெடிமேட்ஸ்

122A, பட்டமங்கலத்தெரு,
மயிலாடுதுறை (மணிக்கூண்டு அருகில்)

☎: 223243



ESQUIRE
READYMADES
The entire world for Modern Readymade dresses

எண்ணங்களை வண்ணமயமாக்க!
எஸ்கொயர் வீடியோஸ்

பாத்திமா கனி லாட்ஜ், முதல் மாடி,
மயிலாடுதுறை ☎: 222949



# இந்தியனே!

இமயம் அது தூரமில்லை - ஆனால்
இதயம் அதில் துணிவில்லை - அதனால்
கிழக்கு அது விடியவில்லை - எங்கும்
இருள் அது அகலவில்லை - என்றோ
இருபெரும் அணுக்கள் வெடித்துச்சிதறி
இனி எழவே முடியாது என்று
இருந்த நாடு எழுந்து விட்டது!
அன்னியரை விரட்டிவிட்டு அவர்
ஏற்றிய தீபத்தை அணைத்துவிட்டு
அடிமைதனை நீக்கிய களைப்பில் அயர
சென்றவரே! ஐம்பது ஆண்டுகள் ஆனதை
அறியீரோ! அல்ல மறந்தீரோ!

இரா.ப்ரியன்
இளம் கணினி (இடை)



# திறவுகோல்

**சட்டம் எனும் இருள் அறையை குறிப்பிட்ட சிலர் மட்டும் அறிந்திருந்தால் போதுமா? நாமும் இந்நாட்டின் பிரஜை தானே? நம் நாட்டில் என்னென்ன சட்டங்கள் தான் உள்ளது. இதை நாமும் அறிய வேண்டாமா? இந்த இருளை அகற்ற எங்கள் திறவுகோலை அறிமுகப்படுத்துகிறோம் உங்களுக்கு. பயன் பெறுவீர்கள் என்ற நம்பிக்கையோடு . . .**

மாற்றுமுறை ஆவணங்கள் சட்டம் வணிக நடவடிக்கைகளில் இந்தச் சட்டம் பெரும் பயனளிக்கிறது. ரொக்கப்பணத்திற்கு மாற்றாகப் பயன்படுத்தப்படும் காசோலை, கடனுறுதிச்சீட்டு, விரைவோலை, உண்டியல்கள் போன்றவையே மாற்றுமுறை ஆவணங்கள் ஆகும். (**NEGOTIABLE INSTRUMENTS**)

குறிப்பாகப் பணத்திற்கு மாற்றாக வழங்கப்படும் காசோலை, வழங்கியவரின் வங்கிக் கணக்கில் தேவையான அளவுப் பணம் இருப்பில் இல்லையென்றால் வங்கியால் திருப்பப்பட்டு விடும். இதனால் காசோலை வழங்கப்பட்ட நபருக்கு அப்பணம் கையில் கிடைப்பது கடினமாகி விடுகிறது. அத்தொகைக்காக மாற்றுமுறை ஆவணங்கள் சட்டப்படி காசோலை வழங்கியவர் மீது சிவில் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்வதில் பெருத்தப் பொருட் செலவும், தாமதமும், நடைமுறைச் சிக்கல்களும் முன்பு ஏற்பட்டது. ஏனென்றால் அது ஒரு (உரிமையியல்) சிவில் சட்டமாகும். இச்சிரமத்தை நன்கு உணர்ந்த அரசு மேற்படிச் சட்டத்தில் திருத்தம் கொண்டு வந்து 138, மற்றும் 142 பிரிவுகளின் படி காசோலை பணமின்றி வங்கியால் திருப்பப்பட்டால் பாதிக்கப்பட்ட நபர், காசோலை வழங்கிய நபர் மீது குற்றவியல் (கிரிமினல்) நீதிமன்றத்தில் நடவடிக்கைத் தொடர வழிவகைச் செய்கிறது. காசோலைத் திருப்பப்படுவது குற்றமாக அப்பிரிவு கூறுகிறது. இதற்குச் செலவு மிகக் குறைவு என்பதோடு குற்றவியல் நடைமுறைச்





சட்டங்களின் படி விரைவானத் தீர்வும் கிடைக்கிறது.

**மாற்றுமுறை ஆவணங்கள் சட்டப் பிரிவு 138 மற்றும் 142 பிரிவுகளின் படி.**

1. ஒருவர் தான் தரவேண்டியத் தொகைக்காக வேறு நபருக்கு வழங்கிய காசோலை, வழங்கிய நபரின் வங்கிக் கணக்கில் காசோலை போதிய

2. தொகை இன்றி வங்கியால் திருப்பப்படும் நிலையில் மேற்படிக் காசோலை திருப்பப்பட்டத் தேதியிலிருந்து 15 தினங்களுக்குள் அக்காசோலை திருப்பப்பட்ட விவரத்தை எழுத்துமுலமாக காசோலை வழங்கப்பட்ட நபர் வழங்கிய நபருக்கு அறவித்துஅத்தொகையினை செலுத்தக் கோரவேண்டும். அந்த அறிவிப்பை பெற்ற காசோலை வழங்கிய நபர், தொகை செலுத்த அறிவிப்பு கிடைத்த தேதியிலிருந்து 15 தினங்கள் அவகாசம் எடுத்துக் கொள்ளலாம். அந்த 15 நாட்கள் அவகாசத்திற்குள் தொகையின் காசோலை வழங்கிய நபர் வழங்கப்பட்ட நபருக்கு செலுத்தத் தவறினால் நடுவர் நீதிமன்றத்தில் (MAGISTRATE'S COURT) காசோலை வழங்கிய நபர் புகார் ஒன்றை தாக்கல் செய்ய வேண்டும்.

3.புகாரைபெற்ற நீதிமன்றம் காசோலை வழங்கிய நபருக்கு அழைப்பாணி அணுப்பி அவரை விபாரனை செய்யும் அவர் நீதிமன்றத்தில் முன்னிலையாக தவறினால் பிணையில் வெள்வரமுடியாதகைது ஆனை மூலம் அவரைகைது செய்யவும் வழி உண்டு.

மேற்படிக் குற்றம் நிருபிக்கப்பட்டால் தவறிழைத்த நபருக்கு ஆறு மாதம் முதல் மூன்றுவருடம் வரை சிறை தண்டனையும் அபராதமும் விதிக்கப்படலாம்.

இதற்கான நீதிமன்றகட்டணம் ரு.1 மட்டுமே.

-ஆசிரியர்

## சினிமாவில் நடிக்க விரும்புகிறீர்களா?

பிரிய மாணவர்களே!
வணக்கம்.
ஒரு மகிழ்ச்சியான செய்தி!

இதுவரைநடிப்புப் பயிற்சியில் சேர்ந்திருக்கும்
நமது மாணவர்களில் சிலர் சினிமா மற்றும் தொலைகாட்சித் தொடர்களில்
வாய்ப்புகளைப் பெற்று நடித்துக் கொண்டிருக்கிறார்கள்.
அஞ்சல் மூலமாக சிறந்த பயிற்சி அளிக்கிறோம்.
வயது வித்தியாசமின்றி ஆண்கள், பெண்கள் யார் வேண்டுமானாலும்
சேரலாம். நிறைய மாணவர்களின் வேண்டுகோள்களுக்கிணங்க
டைரக்ஷன், நடிப்பு, ஒளிப்பதிவு, திரைக்கதை, வசனம்
முதலியவற்றிற்கு நேரில் பயிற்சி அளிக்கப்படுகிறது.

Application & Propectus இரண்டையும் பெற ரூ.100/- மட்டும்

STAAR FILM INSITUTE என்ற பெயரில் DD
எடுத்து அனுப்புங்கள் Money Order அனுப்பலாம்.
நேரடியாக வந்தும் பெற்றுக் கொள்ளலாம்.

உங்கள் முகவரியைத் தெளிவாக எழுதி அனுப்புங்கள்.

அட்மிஷன் நடைபெற்றுக்கொண்டிருக்கிறது.

### நீங்க எப்ப சேரப் போறீங்க?

(நேரடி/அஞ்சல் வழிப் பயிற்சி) (Govt.Regd No. 27/2001)

## STAAR FILM INSITUTE

87(old No. 84) First Floor, Vivekananda Colony,
100 FT road, Vadapalani, Chennai - 26 ☎ : 3726776





# உன்னால் முடியும் . . .

*ஒவ்வொரு மனிதனும் சாதனை படைக்க வேண்டும் என்று* விரும்புகிறான். விடாமுயற்சி, தன்னம்பிக்கை, உழைப்பு இம்மூன்றும் உள்ளவர்கள் மட்டும் வெற்றிபெறுகிறார்கள். வெற்றியைக் கண்டு அகமகிழ்வதும், தோல்வியால் வருத்தபடுதலும் மனித இயல்பு. தோல்வி அடைந்தவர்கள் வாழ்வில் விரக்தி அடைந்து விடுகிறார்கள். அவ்வாறு இளைஞர்கள் முடங்கி விடக் கூடாது. "ஆயிரம் முறை தோற்றாலும் ஒரு முறை முயற்சி செய்" என்று கூறினார் விவேகானந்தர். அதுபோல வெற்றி பெறும் வரை எத்தனை முறை தோற்றாலும் தொடர்ந்து முயற்சி செய்ய வேண்டும்.

பத்து முறை கீழே விழுந்தவனிடம் பூமித்தாய்
பாசத்தோடு கூறினாள். "ஒன்பது முறை
எழுந்துநிற்க முயன்றவன் நீ தான்" என்று.

அவன் பத்து முறை தோற்றாலும் அவனுடைய விடாமுயற்சிதான் அவனுக்கு வெற்றியைத் தந்தது. தளராத நம்பிக்கையோடு வாழ்க்கையை எதிர்கொண்டவர்கள் வெற்றியின் மகுடத்தைச் சூடியிருக்கிறார்கள்.

அ.ஹேமா
முதுநிலை கணினி
(முதல்)

ஏழை விறகுவெட்டிக்கு மகனாகப் பிறந்து, கால் வயிற்றுக் கஞ்சிக்கே கஷ்டத்தை அனுபவித்துப் பிற்காலத்தில் அமெரிக்க நாட்டு தேர்தலில் நின்று பன்னிரெண்டு முறை தோற்றபோதும் தளராத நம்பிக்கையால் அமெரிக்கக் குடியரசுத்தலைவரான "ஆப்ரகாம் லிங்கன்".

உண்ண உணவின்றிப் பல நாள் பட்டினியை அனுபவித்து இரயிலில் செய்தித்தாள் விற்று, அறிவியல் ஆய்வில் இரண்டாயிரம்முறை தோற்றபோதும் தன் விடாமுயற்சியால் ஒளிவிளக்கைக் கண்டறிந்த "தாமஸ் ஆல்வா எடிசன்".

இவர்கள் எல்லாம் கடந்த காலச் சாதனையாளர்கள். இவ்வரிசையில் இன்று நம்மிடையேயும் வாழும் ஒரு சாதனையாளர். ஆம்! இராமேஸ்வரத்தில் பிறந்து தனது உழைப்பாலும், தன்னம்பிக்கையாலும், விடா முயற்சியாலும்,

இராமேஸ்வர அலைகளுக்குக் கூட இமயத்தின் உச்சியைத் தொடும் அளவிற்கு வலிமை உண்டு என்று நிரூபித்துக் காட்டியவர் நமது குடியரசுத் தலைவர் "அப்துல் கலாம்"

**கல்லூரிப் பூந்தோட்டத்தில் புதிதாய் பூத்திருக்கும் முதலாமாண்டு மாணவர்களை இளந்தூது ஆசிரியர் குழு மூன்று வினாக்களுடன் சந்தித்தது. இதோ அவர்களின் பகிர்வுகளிலிருந்து சில . . .**

- **பள்ளி வாழ்க்கைக்கும், கல்லூரி வாழ்க்கைக்கும் உள்ள வித்தியாசம்?**
- **தங்கள் மேல்படிப்புக்கு இக்கல்லூரியைத் தேர்ந்தெடுத்த காரணம்?**
- **இத்துறையைத் தேர்ந்தெடுக்க காரணம்?**

இந்த வெற்றி இவர்களுக்கு எளிதில் கிடைக்க வில்லை. அதற்காக அவர்கள் அடைந்த தோல்விகள் ஏராளம். ஆனால், அவர்கள் மனம் தளராமல் தொடர்ந்து முயற்சி செய்ததனால் தான் வெற்றி கண்டார். சுடுவதால் சூரியனை வெறுப்போமா? சுழல்வதால் பூமியை வெறுப்போமா? தோல்வியால் வெற்றியைமட்டும் வெறுப்பதேன்?

*"சுடும் வரை நெருப்பு!*
*சுற்றும் வரை பூமி!*
*போராடும் வரை மனிதன்!*
*நீ மனிதன்!"*

என்ற வைரமுத்துவின் வார்த்தைகளை வைரமாய் நெஞ்சில் பதித்து தன்னம்பிக்கையுடன் போராடிப்பார்.

மற்றவரின் வெற்றிக்காக உழைத்தால் உண்மையான வெற்றியின் மகிமை புரியும். அடுத்தவரின் துயரத்திற்காக அழுது பார்த்தால் மனித நேயத்தின் அருமை புரியும். துவண்டு விழுபவனைத் தாங்கிப் பார்த்தால் தோழமையின் வலிமை புரியும். தோல்வியோடு இன்னொருமுறை முயற்சி வெற்றிக்கான பாதை தெரியும்.

வாழ்க்கைக்கூட இலக்கை சுமந்தால்தான் வளமாகிறது. தோல்வி கூட நம்பிக்கையைச் சுமந்தால்தான் வெற்றியடையும். இளைஞனே! இதுவரை இல்லை என்றாலும், இனிமேல் முடியும். இதுவரை தோல்வியுற்றாலும், இன்னொருமுறை நம்பிக்கையுடன் முயற்சித்தால் வெற்றிபெற முடியும்.

*உன்னால் முடியும்! உன்னால் மட்டுமே முடியும். . . .*





## பூக்களின் அழுகை

*மனிதனைக் கண்டு*
*பூக்களும் வெறுக்கின்றன*
*ஏனென்றால்?*
*பூக்களிலும் சாதியுமல்லி*
*என்று சாதியைக்*
*குறிப்பதால்.*

அ.முகம்மது ஹீமாயூன்
இளம் [illegible]

## பருவம்

*மண்ணில் நீ!*
*பூத்தபோது*
*பேதை தான் -*
*மலரும் போது ஏன்?*
*உனக்குப் போதை!*

ஆர்.பாலமுருகன்
இளம் [illegible] (இடை)

குறைந்தவிலை!

அதிக தரம்!

மயிலாடுதுறை மாநகரில் ஓர் இனிய உதயமாக சுடிதார் மெட்டீரியலுக்கு என்றே பிரத்யேகமாக அமைக்கப்பட்ட ஸ்தாபனம்



# "தாரா"

## சுடிதார் மெட்டீரியல்ஸ்

15, ஹமா சென்டர், 141, பட்டமங்கலத்தெரு,
மயிலாடுதுறை - 609 001.
(நகராட்சி மேல்நிலைப்பள்ளி எதிரில்)

எங்களிடம் மகளிர்க்கான சுடிதார் மெட்டீரியல்ஸ், சுடிதார் ரெடிமேட்ஸ், சிம்மீஸ், ஷால்ஸ், நைட்டீஸ், பேண்டீஸ் அனைத்தும் அதிக தரத்திலும், குறைந்த விலையிலும் கிடைக்கும்.

பள்ளி, கல்லூரி மாணவிகளுக்கு ஆண்டுமுழுவதும் 5% தள்ளுபடியில் சுடிதார் மெட்டிரியல்ஸ் கொடுக்கிறோம் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

ஒரு முறை எங்கள் கடைக்கு விஜயம் செய்யுங்கள். பிறகு நீங்கள் எங்கள் கடையின் நிரந்தர வாடிக்கையாளராக மாறி விடுவீர்கள்.





# ஏழ்மையின் சிகரம்

ஓட்டைக் கூரையின் உள்ளே நுழைந்து
என்னைத் தாக்கிய சூரிய ஒளியின்
சூட்டினில் எழுந்தேன் அவசரமாய்
மழையில் கரைந்த மண் சுவரில் -
இன்றோ, நாளையோ எனத் தொங்கிய
கடிகாரத்தைக் கண்டேன் மணியோ எட்டு . . .

அவசரமாய்த் தேடினேன் நேற்று மாலை - என்னால்
தூக்கியெறியப்பட்ட ஒற்றைக் காதில்லா
புத்தகப் பையினை . . !

வீட்டினுள் எல்லா இடங்களிலும்
தேடியப்பின் கிடைத்தது அடுப்பாங்கரையோரம்
கூட்டி ஒதுக்கப்பட்ட குப்பைகளாக - சில
பக்கங்களே உள்ள புத்தகங்களும் . . .
தலையற்ற உடல் போன்ற பேனாக்களும் . . .

அனைத்தையும் எடுத்து வாசல் நோக்கி
வந்தபோது என் அம்மா வந்தாள்
காணாமல் போன பையில் அரிசியோடு . . .

ப.பாபு
இளம் கணிதம் (முதல்)

# நீ நினைத்தால்

நீ நினைத்தால்
மலையில் ஏறி விண்ணைத் தொடலாம்
மலையின் உயரத்தைக் கண்டு ஒதுங்காதே!
நீ நினைத்தால்
மக்களின் குறைகளைத் தீர்க்கலாம்
அரசியல்வாதி ஆகிவிடாதே!
நீ நினைத்தால்
அன்னதானங்கள் பல்லாயிரம் செய்யலாம்
பிச்சைப் பாத்திரத்தைக் கையில் ஏந்தி விடாதே!
நீ நினைத்தால்
ஆழ்கடல் சென்று முத்தெடுக்க வலை வீசலாம்
காதல் வலையில் சிக்கி விடாதே!
நீ நினைத்தால்
சாதி மதங்களை அகற்றலாம்
சாதிகளை உருவாக்கி விடாதே!
நீ நினைத்தால்
உன் உள்ளங்கையில் உலகை அடைக்கலாம்
எப்படி முடியும் என்று எண்ணிவிடாதே!
முயற்சியோடு தன்னம்பிக்கை இருந்தால்
உன்னாலும் முடியும் . . . . . !

இரா.ஸ்டாலின்
இளம் வணிகம் [illegible]






பரிசளிக்கும் தருணங்கள்
பரவசமாய் இருக்கட்டும் . . .

என்றும் கனிவான சேவையில் . . .

**ஷாலிமார்'ஸ்**
தி ரியல் கிஃப்ட் ஷாப்

Exciting Discount

For All
GIFT ITEMS

- Gift Articles
- Home Interiors
- Greeting Cards
- Perfumes
- Belts
- Sun Glasses
- Fancy Imitations

SHALIMAR'S

41, Avayambalpuram,
(Opp. to Deen Plaza & LIC)
Mayiladuthurai.
☎ : (04364) 221284
Mob: 98431 53015

☎: 242950

## NATIONAL TUTION CENTRE

**19, Chinna Kannara Street,**
**Mayiladuthurai.**

*Best Coaching Efficient Teaching*

*Accountancy Tuition for*
**+1, +2, B.Com., B.B.A., M.Com., MCA**

**B.Sc.,** (Maths Allied Accountancy)
**B.Com.,** ( Business mathamatics & Statistics)

*Contact:*

**Jc. HGF. B. MOHAN** M.Com., B.Ed., M.Phil.
(Vocational P.G. Teacher, G.G.H.S. School Myd.)

**Jc. HGF. V. KUMAR** M.Com.,D.cop.
(Vocational P.G. Teacher, Ramakrishna H.S.School, Kothandapuram.)





# திரு. அப்துல் கலாம்

இராமேஸ்வரம் கடற்கரையிலே
இஸ்லாமியக் குடும்பத்திலே பிறந்தாய் - எனினும்
இராமன் மேலும் பக்தி கொண்டாய்!
இளமையிலே இடையூறுகளுக்கு இடையே படித்தாய்!
பாரதத் தாயின் துயர் துடைக்க வளர்ந்தாய்!
பாரதத்தைக் காக்க ஊன் உறக்கமின்றி உழைத்தாய்!
விஞ்ஞானியாய் உயர்ந்தாய் - எனினும்
ஞானியாய் தத்துவங்கள் உதிர்த்தாய்!
நாட்டிலே ஒற்றுமை வளர்த்தாய்! வல்லரசுகளின்
கண்ணிலே மண்ணைத் தூவி அணுசோதனை செய்தாய்
நல்லரசை வல்லரசாக்க உறுதி பூண்டாய்!
மதமாச்சரியம் கடந்தாய்!
பிரம்மச்சாரியம் காக்கிறாய்! குரானை நாளும் ஓதுகிறாய்!
நீ கீதையையே என்றும் போதிக்கிறாய்!
சாமாதனப் பறவைக்கு அக்னிச் சிறகுகள் தந்தாய்!
ஆகாஷ், அக்னி, ப்ருத்வி, நாக், திரிசூல் ஏவுகணைகளைப்
பாரதத் தாயின் அம்பராத்துணியிலே சேர்த்தாய்! - ஆனாலும்
அமைதியையே என்றும் நாடுகிறாய்!
கவிஞனாய் மிளிர்கிறாய்! விண்ணையும் வீணையையும் மீட்டுகிறாய்
பேச்சைக் குறைத்தாய்! செயலிலே ஜெயித்தாய்!
அரசியல் கடந்தாய்! பலமுகம் கொண்டாய்!
நீ முட்களில் மட்டுமே நடந்தாய்! - இன்று
ரோஜாக்கள் சூழ வாழ்கிறாய்!

பு.ஹரிநாராயணன்
முதுநிலை வேதியல் (நிறை)

# நம்பு உன்னை

நண்பனே

புண்பட்ட மனத்தை
புகைவிட்டு ஆற்றாதே ...!
புன்னகையைக் கொண்டு ஆற்று
காயம் பட்ட மனத்தை
கள் குடித்து மாற்றாதே - உன்
கடமையில் மூழ்கி மாற்று ...
மாறுபட்ட உலகில்
மடிந்து போக எண்ணாதே ...!
மனத்தை இரும்பாக்கு!
மலையைத் துரும்பாக்கு!
உன்னால் முடியும்!
துன்பங்கள் தன்னால் மடியும் ...!

எம்.ரியாகதீன்
இளம் வணிகமேலாண்மை (நிதி)

## பட்டதாரி

மனத்தில் ஊனம்,
செயலில் தோல்வி,
பார்வையில் எதிர்பார்ப்பு,
வெளியில் புன்னகை - ஆம்
அவர்கள்தான் நம் நாட்டுப்
பட்டதாரிகள்!

ஏ.சித்ரா
இளம் நுண்ணுயிரியல் (இரண்டு)



## கிங்

பெண்ணைக் காதலித்து
"சேது" வாக மாறாதே
"தில்" ஆக இருந்து
வாழ்க்கையில்
"கிங்" ஆக மாறு!

ரா.ரமேஷ்
இளம் மின்னணுவியல்
(இரண்டு)






# TATTI

(TamilNadu Advanced Technical Training Institute)

## COMPUTER HIGHER EDUCATION

- PGDCA
- ADV. DIP. In RDBMS
- C, C++,Unix/Linux
- AutoCAD
- DTP
- Dip. in Hardware Technology
- Web Designing

**Govt. of Tamil Nadu**
**Bound to Govt. of India**

*"Delay is the enemy of efficieny"*

Keep in touch,

13-D, IInd Floor, Cutchery Road,
Mayiladuthurai. ☎: (04364) 224971

# பயோடேட்டா

| | | |
|---|---|---|
| பெயர் | : | **வரதாச்சாரியர் பூங்கா** |
| இடம் | : | எனக்கருகில் புதிய பேருந்து நிலையம் இருக்கும். |
| நண்பர்கள் | : | என்னை தேடி வருபவர்கள் |
| எதிரிகள் | : | என்னை அசுத்தம் செய்பவர்கள் |
| பெருமை | : | வேறு எந்த பூங்காவிலும் இல்லாத அளவிற்கு உடற்பயிற்சி சாதனங்கள் என்னுள் உள்ளது. |
| தொல்லை | : | பேருந்துகளின் இரைச்சல், பழங்காவேரியின் நறுமணம்! |
| நீண்டநாள் ஆசை | : | என்னுள் தொடங்கப்பட்ட ஏ.வி.சி. கல்லூரி இன்று தன்னுள் ஒரு அழகிய பூங்காவைக் கொண்டுள்ளது அங்கு என் நினைவாக |
| சொல்லநினைப்பது | : | மனிதர்களே! நிலத்தைத் தூர்த்து, வீடு கட்டுகிறீரே, நாளை நானில்லாமல் மழை வருமா? |

- ஆசிரியர் குழு





# வாசகர் தூது

மாணவச் செல்வங்களுக்கு நல்ல ஒரு நண்பனாகவும், சகோதரனாகவும் இருந்து சிரிக்கத் தூண்டும் நகைச்சுவைகள், சிந்திக்கத் தூண்டும் ஆலோசனைகள், பொது அறிவுகள், துணுக்குகள் என அனைத்துமே பிரமாதம். அதிலும் கூடங்குளம் அணுமின் நிலையம் அமைத்தால் ஏற்படகூடிய இன்னல்கள், இடையூறுகள், என அனைத்துமே அருமை.

ஏ.எம்.பி. பைஜுர் ஹாதி
இளம் வணிகம் (நிறை)

ஆசிரியர் அவர்களே! மாணவர்களுக்குப் பயன்படும் வகையில் செய்திகள் இருந்தாலும், விளம்பரங்கள் சற்று தூக்கலாகவே உள்ளது. இதைக் குறைக்க முயற்சி செய்வீரோ.

சி.கார்த்திகேயன்
இளம் வேதியல் (நிறை)

12 ஆண்டுக்கு ஒரு முறை பூப்பது குறிஞ்சிப் பூ
½ ஆண்டுக்கு ஒரு முறை பூப்பது எங்கள் இளந்தூது!

எஸ்.தீபா
இளம் வணிகம் (நிறை)

பல பயனுள்ள தகவல்களைத் தரும் நீங்கள், ஏன் மாதமொரு இதழ் வெளியிடக் கூடாது. கல்லூரிப் படிப்புடன் பத்திரிகைத் துறையில் ஈடுபடுவது சற்று சிரமம் தான். ஏன் இதற்கு முயற்சி செய்யக் கூடாது. முயற்சித் திருவினையாக்கும் என்பதை நாம் அறிந்தது தானே!

கே.சீதாராமன்
இளம் கணினிப்பயன்பாட்டியல் (இடை)

சென்ற ஆண்டில் நீங்கள் நடத்திய கல்லூரிகளுக்கு இடையேயான ஒரு நாள் இதழியல் பணிப்பட்டறை பற்றிய செய்திகள் எங்களுக்குத் தெரியாமலேயே செய்து விட்டீர்கள். ஆனால், 13-ஆம் ஆண்டு விழாவில் சிறப்பு விருந்தினர் சுகி.சிவத்தின் சிறப்புரையால் நாங்கள் அதை மறந்தோம்.

மு.வசந்த்குமார்
இளம் கணிதம் (நிறை)

இன்னும் ஓரிரு ஆண்டுகளில் நம் கல்லூரிப் பொன்விழாவை எதிர்நோக்கும்
இத்தருணத்தில் நம் மாணவர்கள் இன்னும் என்னதான்
எதிர்பார்க்கிறார்கள். அவர்களின் தேவைதான் என்ன?
இதோ அவர்களின் எண்ணங்கள்
எங்களின் வண்ணங்களில்

கல்லூரியில்
நுழைந்த உடன் கண்களுக்குக்
குளிர்ச்சியாக எங்கு
பார்த்தாலும் தோட்டங்கள்
அமைத்தால் நன்றாக
இருக்கும்

ச.பரமானந்தம்
இளம் விலங்கியல் (முதல்)

நமக்கிருக்கும்
சப்பிலிமென்ட்ரி சிஸ்டத்தை
ஏன் பல்கலைகழகத்திற்கும்
பரிந்துரை செய்யக்கூடாது

ச.மைதிலி
இளம் கணினி (நிறை)

பெண்களுக்கும் என்.எஸ்.எஸ்
கேம்ப்
தொடங்க வேண்டும்.

வி.சுபத்ரா
முதுநிலை நுண்ணுயிரியல்
(முதல்)

நம் கல்லூரியில்
மேலும் பல புதிய துறைகள்
கொணர வேண்டும்.
கல்லூரியில் என்ன
மாற்றங்கள் அவசியமோ
அத்தனையும் வேண்டும்

கே.குருமூர்த்தி
இளம் வணிகம் (இடை)

என்.சி.சி. மாலைநேரக்
கல்லூரிக்கும் விரிவுப்படுத்த
வேண்டும்.

வி.சுஜாப்ரியதர்ஷினி
இளம் கணினிப்பயன்பாட்டியல்
(முதல்)

எக்ஸ்டன்ஷன்
புரோகிராம் நம் கல்லூரியின்
சிறப்பம்சம். இது
தொடர்ந்தால் பயனுள்ளதாக
இருக்கும்

பி.மனோஜ்
இளம் கணினி (இடை)





ச

இரு சக்கர வாகனங்களை
நிறுத்துவதற்குச் சரியான
இடவசதி இல்லை.
தொழிற்நுட்பக் கல்லூரி
மாணவர்களும் அவர்களது
வாகனங்களை இங்கு
நிறுத்துவதால் சிரமமாக
உள்ளது

இரா.ரவிந்தர்
இளம் வணிகம் (நிறை)

கல்லூரி உள்ளேயே
கணினி கற்கும் மாணவர்கள்
அல்லாமல் மற்றவர்களும் கணினி
கற்க ஏற்பாடு செய்தால் எப்படி
இருக்கும்?

ஆர்.மகேஸ்வரி
இளம் வணிகமேலாண்மை
(முதல்)

ர்

கல்லூரி மைதானம்
என்னத்துக்குதான் இருக்கோ?

ந.பிரபு
இளம் கணினி (நிறை)

நான் வந்த நாள் முதல்
பயனில்லாமல் இருந்த
டென்னிஸ் கோர்ட் தற்போது
காணாமலேயே போய்விட்டது.
இதைக் கண்டுபிடித்து
தருவார்களா?

இரா.லெட்சுமி
இளம் மின்னணுவியல் (இடை)

நம் கல்லூரியின் சாலைகளில்
கொட்டிக்கிடக்கும் ஜல்லிகள்
என்று சாலைகளாக மாறும்?

ச.ராஜவேல்
இளம் தாவரவியல் (முதல்)

வே

நான் மாலைக் கல்லூரி
மாணவன். ஏன் எங்களுக்கு
மட்டும் நுண்கலை மன்றத்தைத்
தவிர வேறு எதிலும்
முக்கியத்துவம் தருவதில்லை!

ரா.பிரபாகரன்
இளம் வணிகமேலாண்மை
(முதல்)

கல்லூரி நூலகத்தில் பெண்களுக்குப் போதுமான இருக்கைகள் இல்லை. இதனால் ஆர்வத்துடன் வரும் பெண்கள் ஏமாற்றம் அடைகின்றனர். எனவே இருக்கைகளை மேலும் பெருக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

வி.ஷர்மிளா
இளம் கணினி பயன்பாட்டியல் (முதல்)

பெண்களுக்கான வெயிட்டிங் ஹால் தற்போது இடம் போதாத நிலையில் உள்ளது. அமர்வதற்குப் போதுமான இருக்கைகள் இல்லை, தண்ணீர் வசதி இல்லை. நிறையப் பெண்கள் பயன்படுத்தும் வெயிட்டிங் ஹாலை சரிவர அமைத்துத் தருமாறு வேண்டுகிறேன்.

கி.இராஜேஸ்வரி
இளம் இயற்பியல் (இடை

மாலை நேரக் கல்லூரியில் பயிலும் மாணவ, மாணவியர், கல்லூரியில் நடைபெறும் பல்வேறு விழாக்களில் கலந்து கொள்ள முடியவில்லை. கல்லூரியில் ஏதேனும் நிகழ்ச்சி நடந்து கொண்டிருக்கும். நாங்கள் வகுப்பில் அமர்ந்து பாடம் கவனிக்க வேண்டும். இந்நிலை மாறுமா?

ஆர்.கவிதா
முதுநிலை விலங்கியல் (இடை)

சென்ற ஆண்டு எக்ஸ்டன்ஷன் புரோகிராம் மூலம் ஒரு கிராமத்தைத் தத்தெடுத்து அதன் வளர்ச்சிக்காக சில பணிகளைச் செய்தோம். இதன் மூலம் அக்கிராம மக்களிடையே நல்லுறவை வளர்க்க உதவிய இத்திட்டத்தைத் தொடர வேண்டும்.

[illegible]
இளம் இயற்பியல் (இடை)

இத்துணைக்கும் விடை இரண்டே வரியில்,

*"அமிழ்தினும் ஆற்ற இனிதே தம்மக்கள்
சிறுகை அளாவிய கூழ்"*






# இனி இல்லை "Problem"

எந்தப் புத்தகம் வேண்டும் உங்களுக்கு

நாங்கள் ரெடி தருவதற்கு!
நீங்கள் ரெடியா வாங்குவதற்கு!

அந்தப் புத்தகம் இல்லை

இந்தப் புத்தகம் இல்லை

அந்த *Problem* இனி இல்லை

அனைத்திற்கும் புத்தகச்சோலை

**புத்தகச்சோலை**

தொ.பேசி 228639

15, மகாதானத்தெரு, (தேசியப் பள்ளி எதிர்ப்புறம்)

மயிலாடுதுறை - 1

# உறவுகளை மேம்படுத்துவோம்

**மாறிவரும் இயந்திரமயமான காலச்சூழலில்** மாசுபட்டு வருவது நிலம், நீர், காற்று மட்டுமல்ல மனித உறவுகளும் தான். பணத்தை நோக்கி ஓடிக்கொண்டிருக்கும் மக்களின் காலடிகளில் மிதிக்கப்பட்டு இயந்திர வாழ்க்கையின் விஷப் புகையினால் மூச்சுத்திணறி காலத்தின் கட்டாயத்தால் கட்டுண்டு சிக்கித் தவித்து செத்துக் கொண்டிருக்கிறது மனித உறவுகள். அழிந்து வரும் பறவை இனங்களையும், மிருகங்களையும் அரசாங்கமாவது சரணாலயம் வைத்துப் பாதுகாத்து வருகிறது. ஆனால் அழிந்து வரும் மனித உறவுகளை எங்கே சரணாலயம் வைத்து யார் பாதுபாப்பது?

எங்கோ அமெரிக்காவில் இருக்கும் முகம் தெரியாத யாரோ ஒருவரிடம் இணையத்தில் மணிக்கணக்கில் அரட்டையடித்துக்கொண்டிருப்போம். ஆனால், நம் பக்கத்து வீட்டில் இருப்பவர் யார் என்றுகூட நமக்குத் தெரியாது. அண்டை அயலார்களின் சுக துக்கங்களில் பங்கேற்பது, உறவினர்களுக்குக் கடிதம் எழுதுவது போன்ற பழக்கம் எல்லாம் கிட்டத்தட்ட இல்லாமல் போய்விட்டது என்றே கூறலாம்.

> பள்ளியில் அதிக பாடவேளை, கல்லூரியில் நான்கு மணிநேர பாடவேளை மட்டும்தான்.
>
> என் அண்ணன் இந்தக் கல்லூரியில் படித்து நல்ல பணியில் உள்ளார். அதனால் நானும் இதையே தேர்வு செய்தேன்.
>
> எம்.சி.ஏ., படிக்கனும் என்பதற்காகத் தான் இந்தக் கோர்ஸைத் தேர்ந்தெடுத்தேன்.
>
> க.வாசுகி இளம் இயற்பியல் (முதலா)

முன்பெல்லாம் விடுமுறை மற்றும் பண்டிகை நாட்களில் உறவினர்கள் வீட்டிற்குச் செல்வது வழக்கம். ஆனால், இப்போதெல்லாம் பண்டிகை நாட்கள் என்றால் தொலைக்காட்சிகளின் சிறப்பு நிகழ்ச்சிகளைப் பார்க்கவே நமக்கு நேரம் சரியாக இருக்கிறது. உலகத் தொலைக்காட்சிகளில் முதன் முறையாக, திரைக்கு வந்து சில மாதங்களே ஆன, புத்தம் புதிய சூப்பர் ஹிட் மெகா திரைபடத்தை விட்டுவிட்டு நாம் எங்கே உறவினர் வீட்டிற்குச் செல்வது?. அப்படியே அந்தத் திரைப்படத்தைத் தியாகம் செய்து விட்டு, நாம் சென்றாலும் அங்கே அவர்கள் நம்மை அசவரமாக வரவேற்று உசபரித்துவிட்டுத், தொலைக்காட்சியைப் பார்க்கத் தொடங்கி விடுவார்கள். பிறகென்ன நம் வீட்டில் பார்க்க வேண்டிய திரைப்படத்தை, நாம் அவர்கள் வீட்டில் உட்கார்ந்து பார்த்துவிட்டு வரவேண்டியதுதான்.

இக்காலக் குழந்தைகளுக்குத் தங்கள் உறவினர்கள் யார், யாரென்றே தெரியவில்லை. பெரியப்பா, சித்தப்பா, மாமா, அத்தை போன்ற உறவுகளை எதிர்கால சந்ததியினர் வெறும் வார்த்தைகளாகத்தான் அறிந்திருக்கப் போகிறார்கள்.





"சித்தி", "அண்ணி" போன்ற வார்த்தைகள் பிரபலம் அடைந்திருப்பதே சின்னத்திரை மெகா தொடர்களின் தயவால் தான். இப்போதெல்லாம் வீட்டிற்கு யாராவது உறவினர்கள் வந்தால் குழந்தைகள் அவர்களின் அறையிலிருந்து வெளியே வருவதில்லை. பெற்றோர்களும் அவர்களை வெளியே அழைத்து வந்து வந்தவர்களுடன் பேசிப் பழகச் செய்யலாம். குழந்தை அறைக்குள் படித்துக்கொண்டிருப்பதாகச் சொல்லி அவர்களை மேலும், மேலும் தனிமைப்படுத்தி உறவுகளின் இடைவெளியினை அதிகரித்துவிடுகின்றனர்.

இதெல்லாம் இப்படியே விட்டுவிடுவதா? கூடாது, கண்டிப்பாகச் சரிசெய்ய வேண்டும். எப்படி சரிசெய்வது? மனித உறவுகளை எப்படி மேம்படுத்துவது? நம்மைச் சுற்றி வசிப்பவர்கள் யார் யாரென்று அறிந்து கொள்ளுங்கள். அவர்களின் சுக துக்கங்களில் உள் அன்புடன் கலந்து கொள்ளுங்கள்.

உறவினர்களுக்கு மாதம் ஒரு முறையாவது கடிதம் எழுதுவதையோ, தொலைபேசியில் அழைத்து நலம் விசாரிப்பதையோ வழக்ககமாக்கிக் கொள்ளுங்கள்.

குழந்தைகளுக்கு உறவினைச் சொல்லி அழைப்பதற்குப் பழகுங்கள்.

விடுமுறை நாட்களில் குழந்தைகளை உறவினர் வீட்டிற்கு அழைத்துச் செல்லுங்கள்.

பண்டிகை தினங்களில் வாழ்த்துக்களையும், இனிப்புகளையும் பரிமாறிக் கொள்வதை வழக்கமாக்கிக்கொள்ளுங்கள்.

நண்பர்கள் மற்றும் உறவினர்களின் பிறந்தநாள் மற்றும் திருமண நாளை முடிந்தவரை ஞாபகம் வைத்து உங்கள் வாழ்த்துக்களைத் தெரிவியுங்கள்.

**"நாம் வாழும் வாழ்வே சிலகாலம்தான்**
**உறவோடு வாழ்ந்தால் அது பூக்கோலம்தான்"**

என்ற வைர வரிகளின் உண்மைகளை உணர்ந்து இனியாவது
உறவுகளை மேம்படுத்துவோம் வாருங்கள்!

கீ.கிதா
கணினிப் பயன்பாட்டியல் (நிறை)

## வருந்துகிறோம்

நமது கல்வி நிறுவனங்களின் ஆட்சிமன்ற குழுத்தலைவர் திரு.வி.என். குமார் அவர்களின் இரங்களுக்கு இளந்தூதுவின் ஆழ்ந்த அஞ்சலிகள்.

விணணபபக கடடணம — இல்லை
பயிறசிக் கட்டணம — &
புத்தகக் கட்டணம — இலவசம்

- தேசியக் கல்வி மேம்பாட்டுக் குழுவின் கீழ் அடிப்படைக் கல்வி முதல்
- E.Com கல்வி வரை இலவசக் கல்வி
- வேலைவாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்யதக்க சான்றிதழ்
- பல்கலைக்கழகத் தேர்வு முறைகள்.
- தமிழக அளவில் வெற்றிபெறும் முதல் மூன்று பேருக்குக் கேடயம் மற்றும் சான்றிதழ்

அனைத்தும் அடைய அனுகவும்

**C-INFOSOFT**

தெற்கு மடவிளாகம், பேரளம். ☎ 14366 - 539510
Authorised Centre of TCPS

Opp: ICICI Bank, மகாதானத்தெரு, மயிலாடுதுறை.

**கலையரசி** டுடோரியல் சென்டருக்கு வாங்க

கவலையை விடுங்க

- Spoken Hindhi
- Spoken English (Basic, Functional & Phonetics)
- competative Exam Coaching (TNPSC, BSRB, RRB .....)
- ICWA, CA, MBA வகுப்புகள் Entrence, Exam பயிற்சி
- நவீன - லைப்ரரி வசதியுடன்
- கல்லூரி மாணவ மாணவிகளுக்காகக் கணிதம் மற்றும் காமர்ஸ் சிறப்பு - நவீனப் பயிற்சி

**KATC**
WAY OF FUTURE
UNBELIVABLES AVAILABLE HERE





# நகராட்சி

ஆசிரியர் குழு

கி.பி. 12 ஆம் நூற்றாண்டு வரை மயிலை என்று அழைக்கப்பட்டு வந்த இந்நகரம், மாயூரபுரம் என்றாகிப் பின்னர் மாயூரம் என மருவி, கி.பி.18 ஆம் நூற்றாண்டு முதல் மாயவரம் என்றானது. 1948 முதல் மாயுரம் என்று அழைக்கப்பட்டு வந்த இந்நகரம், (தமிழக அரசின் வருவாய்த்துறை அரசாணையம் எண் 974 நாள் 8.6.1982 இன் படி) மயிலாடுதுறை எனப் பெயர் மாற்றம் செய்து உத்தரவிடப்பட்டது. அவ்வுத்தரவு 27.6.1982 முதல் அமுலுக்கு வந்தபின் மயிலாடுதுறை என்றாகி உள்ளது. இந்நகராட்சி 1866-ஆம் ஆண்டில் தோற்றுவிக்கப்பட்டதாகவும் "தள்ளா விளையுளும் தக்காரும் தாழ்வுஇலாச் செல்வரும் சேர்வது நாடு" என்ற வள்ளுவர் வாக்கிற்கிணங்க அமையப் பெற்ற நகரமாகும் இது.

ஏற்கனவே மயிலாடுதுறை நகராட்சி பிரிவுபடாத தஞ்சை மாவட்டத்தில் அமைந்திருந்தது. தஞ்சை மாவட்டதிலிருந்து நாகை மாவட்டத்தைத் தலைநகராகக் கொண்டு 18.9.1991 முதல் நாகப்பட்டினம் மாவட்டத்தில் அமையப்பெற்றது. (தமிழக அரசின் ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அரசாணை எண் 498, 23.3.1984- தேதியிட்ட அரசாணையின்படி) 28.3.1984-ஆம் தேதி முதல் தேர்வு நிலை நகராட்சியாக இயங்கி வருகிறது. இந்நகராட்சியின் மொத்தப் பரப்பளவு 11.26 சதுர கிலோமீட்டராகும்.

இந்நகராட்சி எல்லைக்குள் வருவாய்க் கிராமங்களை உள்ளடங்கியுள்ளது. கூறைநாடு (முழுவதும்), பண்டாரவாடை, மாப்படுகை (பகுதி), திருவிழந்தூர், சித்தர்க்காடு (பகுதி), பட்டமங்கலம், மயிலாடுதுறை, வள்ளலாகரம், மன்னம்பந்தல் (பகுதி).

2001-ஆம் ஆண்டில் எடுக்கப்பட்ட மக்கள் தொகைக் கணக்கெடுப்பில் இந்நகராட்சியின் மக்கள் தொகை 86,700 ஆகும். இந்நகராட்சிக்கு அரசால் அங்கீகரிக்கப்பட்ட நகர் மன்ற உறுப்பினர்கள் 36.

இந்நகராட்சியை நிர்வகிக்கும் நிர்வாகிகள் ஆணையர், பொறியாளர், நகர்நல அலுவலர், மேலாளர், கணக்கர், வருவாய் அலுவலர் ஆவர். நகராட்சித் தேர்தலுக்கென இந்நகராட்சி மொத்தம் 36 உறுப்பினர்கள் கொண்ட வார்டுகளாக அமைக்கப்பெற்று நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்குத்துறையின் (தேர்தல்துறை) அரசாணை எண் 189 நாள் 20.8.96-இன் உத்தரவின்படி வார்டுகள் ஒதுக்கப்பட்டன.

நகர்மன்றப் பணிகளைச் செம்மையாகச் செயல்படுத்திட நகர்மன்றத்திற்கு உதவிட நிலையான குழுக்களாக ஒப்பந்தக்குழு, நியமனக்குழு, உள்ளூர் திட்டக்குழு, வரிமேல்முறையீட்டுக் குழு ஆகியவைகள் தோற்றுவிக்கப்பட்டன.

நிர்வாகப் பிரிவில் பணியாற்றும் அலுவலர்களுக்கு வழங்கப்படும் ஊதியம் அகவிலைப்படி, வீட்டு வாடகைப்படி, சிறப்பூதியம், இடைக்கால நிவாரணம், வாகனப்படி, மருத்துவப்படி, பிரயாணப்படி, ஒய்வூதியம், ஒய்வுக்காலச் சாயத்தொகை மற்றும் படிவங்கள், புத்தகங்கள் 2001-ஆம் ஆண்டின் கணக்குப்படி ரூ. 81,78,493 ஆகும். அதே ஆண்டில் நகர்மன்றத் தலைவர் மற்றும் உறுப்பினர்கள் மன்றக் கூட்டங்களுக்கு வருகைத்தந்ததிற்கான மதிப்பூதியமாக ரூ. 1,32000 செலவிடப்பட்டுள்ளது.

எதற்காக ஒரு நகராட்சி? எதற்காக இத்தனை ரூபாய் செலவுகள்? எத்தனை எத்தனை குழுக்கள்? இதனைக் கண்காணிக்கும் நிர்வாகிகள் மற்றும் நகர்மன்ற உறுப்பினர்கள். ஏன் இவர்கள் அங்குச் செயல்பட்டு கொண்டிருகிறார்கள்? இதெல்லாம் யாருக்காக? . . .

தொடர்ச்சி 96





# என்ன சொல்லப் போகிறாய்

பகத்சிங் நம் அடிமைத்தனத்தை
நீக்க உயிர்விட்டான்!
நீயோ அடிமையாய்
மாது பின்னால்.

வேண்டாத எண்ணங்களால
உன் மனத்தைக்
குப்பைத் தொட்டியாக்கிக் கொண்டு,
பின் நிம்மதி தேடி
மது பின்னால்.

உன்னால் பறிபோன பலரின்
நிம்மதியைப் பற்றி யோசித்தாயா ?
உனக்கு நீயே கல்லறையாகாதே !
உன்னை 'வருங்காலச் சிற்பியே'
என்று அழைத்தவற்கு
என்ன சொல்லப் போகிறாய்?

பா.இன்பநிலா
முதுநிலை வேதியல் (முதல்)

# உயிர்

"எப்படி கமலா? எப்படி? ஒரு உயிரைக் கொல்ல இவனுக்கு என்ன உரிமையிருக்கு? நம்ம உயிரை நாமே மாய்ச்சுக்கறதையே தப்புன்னு சட்டம் சொல்லுது! அப்படியிருக்கறப்போ

இ.ராஜேஸ்வரி
இலங் இயற்பியல் (இடை)

கிரிஜா சுழன்று சுழன்று பரபரவென வேலை செய்து கொண்டிருந்தாள். அவளுக்கு மனசெல்லாம் ஒரே சந்தோசம். காரணம், திருமணமான பின்பு முதன் முறையாக அவளின் அக்கா தன் கணவருடன் இங்கு வரப்போகிறாள். சிறுவயதிலேயே தாய், தந்தை இறந்துவிட, கிரிஜாவின் அக்காதான் அவளை இந்த நிலைக்கு வளர்த்து உயர்த்தி பெயர்சொல்லுமளவுக்கு ஆளாக்கினாள். கிரிஜாவிற்கு இப்போது கூட அதையெல்லாம் எண்ணுகையில் கண்ணில் நீர் தழும்பிற்று.

மணியைப் பார்த்தாள் 10.20. பதினொரு மணிக்கு வந்துவிடுவதாக சொல்லியிருந்தார்கள்.

மாங்காயைச் சிறுசிறு துண்டுகளாக நறுக்கிப் பச்சடிக்கு வைத்துவிட்டுப், பயத்தம்பருப்பும், அரிசியும், வெல்லமும் சேர்த்து வைத்த அடுப்பில்



கொதித்துக் கொண்டிருந்த பாயாசத்தை மறுமுறை கிண்டிவிட்டாள்.

அப்போதுதான் அவளுக்குத் தன் அக்காவிற்குப் பிடித்த 'முந்திரி கேக்' வாங்கி வைத்தது ஞாபகம் வந்தது. உடனே, ஷெல்பைத் திறந்து அந்தப் பெட்டியை எடுத்தாள். இனிப்பு என்பதால் நிறைய எறும்புகள் அதில் மொய்த்துக் கிடந்தன.

அவளுக்குப் பொல்லாத கோபம் வந்துவிட்டது. "தன் அருமையான அக்காவிற்கு பிடிக்கும் என்று வாங்கி வைத்தால் ... ச்சே! இந்த எறும்புகள் இப்படி வந்து விட்டதே"

சுற்றும் முற்றும் பார்த்த அவள், அந்த கேக் இருந்த பெட்டியை எடுத்துக் கொண்டு கொல்லைப்புறம் சென்றாள். வெயில் கொளுத்தி எடுத்தது. இருபுறமும் பூத்துக் குலுங்கிய செடிகளின் நடுவில் நீண்டு சென்ற சிமெண்ட் தளத்தில் அவள் கையில் இருந்த இனிப்புப் பெட்டியைச் சட்டென கவிழ்த்தாள். கொதிக்கும் அந்தத் தரையில் விழுந்த எறும்புகள் ஒருகணம் துடித்து மறுகணம் பட்டென்று செத்தன. ஒரு குரூர புன்னகையுடன் பார்த்துவிட்டுக் கிரிஜா உள்ளே நுழைந்தாள்.



மயிலாடுதுறையில்
பத்து வருடங்களுக்கு மேலாக ஸ்டிக்கர் தொழிலைச் செய்து வரும் நிறுவனம்.
டூவீலர்கள் மற்றும் கார்களுக்குப் பெயிண்ட் மூலம் நம்பர் பிளேட் எழுதித்தருகிறோம்.



# தசன் டிசைன்ஸ்

**கம்ப்யூட்டர் சைன்மேக்கிங் சிஸ்டம்ஸ்**

15 கச்சேரிரோடு,
மயிலாடுதுறை. ☎: 227482

வினையல் சைன் போர்டு, சன்கண்ட்ரோல்பிலிம், ஸ்கிரீன் பிரிண்டிங், டூவீலர் மற்றும் கார்களுக்கு நம்பர் பிளேட் கூலிங் பேப்பர் சிறந்த முறையில் ஒட்டித் தருகிறோம்.







# BISMI FURNITURES (P) LTD.,

**Head Office**

Bismi Furnitures(p) Ltd.,
Deen Complex, O.S.M.Nagar,
Mayiladuthurai - 609 001
Ph. No - 04364 - 222856

**Branches**

Bismi Funitures
80, Nageswaran North,
Kumbakonam - 612 001.
Ph.No : 0435 - 425262

Bismi Furnitures (p) Ltd.,
554, Maraimalai Adikal salai,
Pondicharry - 605 001
Ph.No. - 0413 - 221297

"யம்மா! யம்மா ................!" வேலைக்காரி குரல் கொடுத்துக் கொண்டே வீட்டிற்குள் நுழைந்தாள். "அடேங்கப்பா ........ என்னா வெயிலு! கொஞ்சம் ஜில்லுன்னு தண்ணி கொண்டாம்மா.!" என்றபடியே ஆசுவாசமாய்த் தரையில் அமர்ந்தாள் வேலைக்காரி கமலா.

தண்ணீரைக் கொண்டு வந்து கொடுத்துவிட்டு, கிரிஜா, "என்ன கமலா? தலைவாழை இலை வாங்கிட்டு வரச் சொன்னேனே! பச்னு இருக்கனும்! ஜூஸ் போட எலுமிச்சை வாங்கிட்டு வந்தாயா, இல்லையா?" என்றாள்.

"இந்தாம்மா! நீ சொன்ன மாதிரியே எல்லாமே தோயிருக்கு பாத்துக்க!"

" ஆமா ...... பின்னாடி தெருவுல என்ன நேத்தெல்லாம் ஒரே சத்தம்?" கிரிஜா காய்கறிகளை எடுத்து பிரிட்ஜில் அடுக்கியபடியே கேட்டாள்.

"அத இன்னாத்துக்குமா கேக்குற? அந்தக் குமாருபய இல்ல, அதான் நெதமும் குடிச்சிட்டு வந்து ராவுல கத்துவானே, அவன், நேத்து ராவும் நல்லா தண்ணியபோட்டுகினு வந்துருக்கான்! அப்ப அவன் பொண்டாட்டியப் போட்டு அடிச்சிருக்கான் போல! அவ அழுதுட்டே ஏன்யா இப்படி பண்றேன்னு கத்தியிருக்கா!

> பள்ளியில் எல்லா பாடபிரிவுகளையும் படிக்கவேண்டும். ஆனால் இங்கு விருப்பப்பட்ட பாடங்களை மட்டும் படிக்கலாம்.
>
> தமிழ்நாட்டில் ஐந்தாவது சிறந்த பல்கலைக்கழகத்தின் ஒப்புதலை இக்கல்லூரி பெற்றுள்ளது.
>
> மேலாண்மை படிப்பிற்கே இப்போது அதிக மதிப்பு இருப்பதால் ....
>
> வா.ஸ்ரீவித்யா
> இளம் வணிகமேலாண்மை (முதலா)

அவந்தான் நெதானம் இல்லாம இருக்கானே, நாம கொஞ்சம் வாயப் பொத்திகிட்டு இருப்போம்னு அவளுக்குத் தெரிய வேணாம்? அவன் கோபத்துல கண்ணுமண்ணு தெரியாம அறுவாமனையால வெட்டிப்புட்டான். பாவம்மா அந்தபுள்ள, போசுக்குனு போயிடுச்சு. மணிமணியா ரெண்டு புள்ளங்கம்மா கண்ணுலே நிக்குதுங்க!" கமலா மூக்கை உறிஞ்சினாள்.

கிரிஜாவுக்கு வார்த்தைகள் வெளிவரவில்லை. தொண்டை அடைத்து கண் கரித்தது.

"எப்படி கமலா? எப்படி? ஒரு உயிரைக் கொல்ல இவனுக்கு என்ன உரிமையிருக்கு? நம்ம உயிரை நாமே மாய்ச்சுக்கறதையே தப்புன்னு சட்டம் சொல்லுது! அப்படியிருக்கறப்போ .... ச்சே!





கடவுளால படைக்கப்பட்ட உயிரைக் கொல்ல யாருக்கும் உரிமையில்ல! அவனல்லாம் எல்லாம் நடுரோட்டுல நிக்கவச்சி சாட்டையால விளாசனும்!" மூக்கும், முகமும் சிவந்து கண்ணில் கனல் தெறிக்க கோபத்துடன் கிரிஜா பேசினாள்.

"என்னவோம்மா .... இந்த, மாதிரி படிச்ச புள்ளங்களுக்குத் தான் எல்லாம் தெரியுது! படிக்காத எங்களப் போல முட்டுக்கட்டைங்க தான் இப்படியெல்லாம் சீரழியுதுங்க!" என்று கூறியவாறே கமலா வேலைகளைக் கவனிக்க உள்ளே நுழைந்தாள். இன்னும் கிரிஜாவிற்குக் கோபம் போபமாய் வந்தது. எதற்கோ கொல்லைப்புறம் வந்தவள் சட்டென திகைத்து நின்றாள்.

> மிகவும் மகிழ்ச்சியான பாதையில் அழைத்துசென்றது பள்ளி பருவம், வெற்றிப் பாதையில் அழைத்துச் செல்வது கல்லூரிப் பருவம் அவ்வளவுதான்.
>
> இந்தக் கல்லூரி ஒரு நல்ல கல்லூரி. " பெயர் சொன்னால் போதும் சும்மா எளிதில் விளங்கும்" இது டால்மியாவோட விளம்பரத்துக்கு அல்ல, கல்லூரிக்காக ... சொல்றேன்.
>
> இது ஒரு நல்ல கோர்ஸ். மேலும் பல நோய்களைத் தீர்க்க மருந்து கண்டுபிடிக்கவும், வாழ்வில் முன்னேற்றம் பெறவும் உதவுகிறது.
>
> ரெ.சுகன்யா
> இளம் நுண்ணுயிரியல் (முதலா)

சற்றுமுன் அவளால் கொல்லப்பட்ட நூற்றுக்கும் மேற்பட்ட எறும்புகள் காய்ந்துபோய் கிடந்தன!

கடவுளால் படைக்கப்பட்ட எந்த உயிரைக் கொல்லவும் யாருக்கும் உரிமையில்லை என்று கோபப்பட்ட அவளுக்கு, இப்போதுதான்,

கொல்லப்பட்ட அந்த பெண்ணுக்குள்ளும், இந்த எறும்புக்குள்ளும் இருப்பது ஒரே உயிர் எனப் புரிந்தது •

## வளையா வில்

*வானில் இறைவன் வரைந்த*
*அழகான ஓவியம் வானவில்!*
*மண்ணில் மனிதன் தனக்குள்*
*வரைந்த அழியாத ஓவியம்*
*வறுமை எனும் வளையா வில்!*

எஸ்.ஜெசிந்தா பிரசன்னா
இளம் மின்னணுவியல் (இடை)

☎:222816

தேவர் பாத்திரக்கடை

S.N. குருமூர்த்தி சன்

பித்தளை & எவர்சில்வர்

பாத்திர வியாபாரம்,



பெரியகடைத்தெரு,

மயிலாடுதுறை - 609 001.

மயூரா

குவாலிட்டி ஜெராக்ஸ்

நெ.3, பழனிச்சாமி அங்காடி, (சுந்தரம் தியேட்டர் எதிரில்)

மயிலாடுதுறை ☎:224403

⊙MULTI COLOUR XEROX ⊙LASER PRINTING
⊙OFFSET PRINTING ⊙DTP ⊙PROJECT WORK

☎ STD, ISD, PCO, FAX

LAMINATION SPIRAL BINDING





மயிலாடுதுறையின் அழகிய
காலணிகளின் கடல்

பாட்டம் ஷூ மார்ட்

117/123, பட்டமங்கலத் தெரு,
மயிலாடுதுறை.



குறிப்பு : [ Bata, Action, Liberty, Phonscix, Aristocrat, Diamond, Rex ]

ஆகிய கம்பெனிகளின் காலணிகள்
கிடைக்கும்

## வறுமை

இஸ்திரி
போடுபவனின்
வயிற்றில்
சுருக்கங்கள்

தே.கணேஷ்பிரபு
இளம் வணிகம் (இடை)

## குடிமகன்

நாட்டை காப்பாற்ற
AK 47 ஏந்த வேண்டிய
கையில்
மதுப்பாட்டில் ....

வே.எழில்ராஜா
இளம் இயற்பியல் (நிறை)

## புரட்சியை நோக்கி

ஒரு மாபெரும்
புரட்சியை நோக்கி
புறப்பட்ட
எனது மக்கள்
தேர்தல்
சாவடி எனும்
நுழைவு வாயிலைக்
கடந்து வரும் போது
அரசியல்வாதிகள் எனும்
அட்டைகளால்
இரத்தம் உறிஞ்சப்பட்டு
எலும்புக் கூடுகளாய்ப் போனார்கள்!

பி.கணேசன்
முதுநிலை த [illegible] (இடை)





# இளன் ... ஆசி ... வாசி ...

***மாயா மாயா .மாயா ... எல்லாம் மாயா ...
சாயா சாயா சாயா .... எல்லாம் சாயா..*** என்று தெருக் கோடிவரை கேட்கும் அளவிற்குச் சத்தம் வைத்து ஆனந்தமாகப் பாட்டு கேட்டுக் கொண்டிருந்தான் ஆசி.

"என்னடா? பாட்டெல்லாம் பலமா இருக்கு! வீட்டுல யாரும் இல்லையா?" என்றவாறே உள்ளே வந்தான் வாசி. "ஆமான்டா, தலைவர் பாட்டுல்ல சும்மாவா. ஆமா . . பாபா எப்படி இருக்காராம்?" ஆவலாகக் கேட்டான் வாசி.

"அதயேன் கேக்குற. "பாபா" என்ற பேச்சை ஆரம்பிச்சதிலிருந்து தலைவருக்கு ஒரே பிரச்சனையாம். அதற்காக வீடெல்லாம் மாத்தி சிறப்பு யாகம் நடத்திருக்காரு".

"சரி, நமக்கேண்டா அதெல்லாம், நம்ம காலேஜ் மேட்டர் ஏதாவது ஜில்லுன்னு சொல்லு கேட்போம்" என்றான் ஆசி ஒரு வார இதழைப் புரட்டியவாறு.!

"கேன்டீன்ல ஐஸ்கிரீம் விலை ஏத்திட்டாங்களாமே உனக்குத் தெரியுமா?"
" ஏய்! இந்த நக்கல் தானே வேண்டாங்கறது."

"சரி சரி சொல்றேன் கேளு, காலேஜ்ல சத்தமே இல்லாம இரண்டு பேர் மாநில விருது வாங்கியிருக்காங்க தெரியுமா?"

"யாருடா? அது! எனக்குத் தெரியாம !"

"உனக்கு தெரிஞ்சவங்கதான்டா, நம்ம விலங்கியல் பேராசிரியர் **அசோகன்** சாருக்கு மாநில அளவிலான சிறந்த என்.எஸ்.எஸ். ஒருங்கிணைப்பாளர் விருது கிடைத்திருக்கு. அது மட்டுமா? அவரோட மாணவர் **விடுதலையும்** தமிழ்நாட்டிலேயே சிறந்த என்.எஸ்.எஸ் வாலண்டியருக்கான விருதைப் பெற்றுள்ளார்".

"யாரு நம்ம இளந்தூது ஆசிரியராக இருந்தாரே அவரா?"
" . . . . . . . .ம். அவரேதான் "

"ஆமாம் ஆசி, நீ பைன் ஆர்ட்ஸ் செலக்ஷன்க்குப் போனியே என்னாச்சு?"

"வழக்கம்போலதான், ஆனா அங்க வந்த ஒவ்வொருத்தரும் தங்களுடைய திறமையை எப்படித் தெரியுமா வெளிப்படுத்தினாங்க ? அப்பப்பா.

"உனக்கு மட்டும் தான் தெரியுமா? ஜில்ஜில் மேட்டரு. இப்ப என்னோடத கேளு. இந்த வருடத்தின் மாயூரம் ரோட்டரி சங்கச் செயலராகவும், மாயூரம் மிட்டவுன் ரோட்டரித் தலைவராகவும் நம்ம வேதியியல் துறைத் தலைவர் **வாசுதேவன்** சாரையும், விலங்கியல் துறைப் பேராசிரியர் **இராமசாமி** சாரையும் தேர்ந்தெடுத்திருக்காங்களாம். அதோட **சரவணமுத்து** சாரும் அதான்பா நம்ம தாவரவியல் துறை பேராசிரியர் இருக்கார்ல அவரும் தமிழ்நாடு வேளாண்மைத்துறை மேலாண்மைக் குழ உறுப்பினராயிருக்காருத் தெரியுமா."

"அப்படியா! கேட்கவே ரொம்ப சந்தோஷமா இருக்கு. உனக்கெப்படிடா இந்த விஷயமெல்லாம் தெரிஞ்சுது." பூரிப்பில் மிதந்தான் ஆசி

> பள்ளி வாழ்க்கையைவிட கல்லூரி வாழ்க்கையில் நேறைய அனுபவம் கிடைக்கிது.
>
> எனக்குச் சிறு வயது முதல் இந்தக் கல்லூரியில் சேர ஆசை. ஏனெனில் இக்கல்லூரி பற்றி என் தந்தை பெருமையாகப் பேசுவார்.
>
> நான் பி.எஸ்.ஸி முடித்த பிறகு எம்.சி.ஏ. இந்தக் கல்லூரியிலேயே படிப்பேன்.
>
> சி.வினோத்குமார்
> இளம் கணினி (முதல்)

சட்டென்று சுறுசுறுப்பான வாசி, தான் புரட்டிய வார இதழ் ஒன்றைக் காட்டியவாறு , "டேய் ஆசி இந்த நியூஸைப் படிச்சியா."

"அடப்போடா, பாடப் புக்கையே படிக்கிறதில்லே இதெல்லாம் படிச்சிட்டா ..." அலட்சியமாகச் சொல்லி கிச்சன் நோக்கி நடைபோட்டான் ஆசி.

அவனைப் பின் தொடர்ந்தவாறே வாசி, "சென்னையில் ஒரு மகளிர் கல்லூரியில அவங்களோட குறைகளை என்னன்னு ஒரு சீட்டுல எழுதிப் பெட்டியில போடச் சொல்றாங்களாம். அதை எடுத்து எல்லார் முன்னிலையிலும் அதை படித்து அதற்குத் தீர்வையும் சொல்றாங்களாம்."





> அட ஏம்பா, ஸ்கூல் வாழ்க்கையைவிடக் கல்லூரி வாழ்க்கையில் சுதந்திரமே இல்லை.
>
> நம் சுற்று வட்டாரத்தில் நல்ல கல்வி நிறுவனம் என்பது நமது ஏ.வி.சி.சி மட்டுமே.
>
> நான் எம்.எஸ்சி., பயோடெக் சேர விரும்பியதால் இந்தக் இ
> கோர்ஸைத் தேர்ந்தெடுத்தேன்.
>
> சு.பாலாஜி
> இளம் நுண்ணுயிரியல் (முதல்)

"அப்புறம் மாணவிகளைப் படிபடின்னு சொல்லி கஷ்டப்படுத்துறதும் இல்லையாம்". ஆசி, "அப்ப நம்ம கல்லூரியிலும் இப்படி இருந்தா நல்லாதான் இருக்கும்"

"அதுசரி மேல கேளுங்க", என்று மீண்டும் சொல்ல ஆரம்பித்தான் வாசி.

"யாராவது காலேஜ்க்கு ஐந்து நிமிடம் லேட்டா வந்தா கல்லூரி முடிந்து ஒரு மணி நேரம் நூலகத்தில் உட்கார்ந்து படிக்கணுமாம். பத்து நிமிடம் லேட்டா வந்தா 2 மணி நேரம் படிக்கணுமாம்."

"அதுமட்டுமில்லை. இறுதியாண்டு மாணவிகளுக்கு மட்டும் 'ஃபினிஷிங் ஸ்கூல்' என்று ஒன்னு நடத்திட்டு இருக்காங்க".

"ஃபினிஷிங் ஸ்கூலா? அப்படின்னா. "இழுத்தான் ஆசி.

"அதுவா! புகுந்த வீட்டில் மாமனார், மாமியார், நாத்தனார், கணவருடன் பழகுவது, செக்ஸ் கல்வி, வீட்டு நிர்வாகம், பணத்தைக் கையாள்வது, ஆண்களின் மனவியல் போன்ற பல விஷயங்களை அவங்களுக்குக் கத்துத்தராங்களாம்."

"என்ன அருமையான சிஸ்டம் பார்த்தியா?" ஆசி ஏங்குவது அவன் முகத்திலேயே தெரிந்தது.

இடையே டிங் ... டிங் "யாருடா அது!" என்று முணுமுணுத்துக் கொண்டே கதவைத் திறந்தான் ஆசி.

எதிரே அவன் அக்கா இளன்.

"ஏய்! வாசி நீ எப்ப வந்த?" என்றாள் இளன் தன் ஹீல்ஸை கழட்டியவாறே.

MCCS

Phone No:220486

# Micro - Chip

COMPUTER SALES, SERVICES AMC, AND COMPUTER PERIPHERALS

We are conducting Hardware Course

1. INTRODUCTION
2. ASSEMBLING
3. INSTALLATION
4. TROUBLE SHOOTING
5. NETWORKING

contact :

No. 4, Agarasasthirigal Building, 1st floor,
77, Pattamangala Street,
Mayiladuthurai -609 001.





"இப்பதாங்க்கா வந்தேன், சரி போகும் போதுதானே கேட்கக்கூடாது, வரும்போது கேட்கலாம்ல. . . ..."

"என்னடா ? ", யோசித்தவாறே பிரிட்ஜைத் திறந்து ஐஸ் வாட்டரைக் குடித்துக் கொண்டே "என்ன கேட்கப் போற?"

"எங்கப் போனீங்கன்னு தான்"

ம்ஹீம். "ஆசியோட சேர்ந்து உனக்கும் இந்த நக்கல் ஒட்டிகிட்டா, காலேஜ்க்குதான் போய்ட்டு வரேன். சரிடா? இன்னிக்கு என்ன டே தெரியுமா? " சீரியஸானாள் இளன்.

> பள்ளியில் அடக்கமான பெண்ணாக இருந்தேன். வீடு பக்கத்தில் இருந்ததால். இப்ப வாயாடியாக இருக்கேன். ஊர்விட்டு வருவதால்.
>
> எங்க relation இங்கதான் எம்.சி.ஏ. படித்து GOLD MEDAL வாங்கினாங்க. அதனால் நானும் இங்கேயே சேர்ந்தேன்.
>
> COMPUTER எனக்கு ரொம்ப INTEREST அதனால் இதை செலக்ட் பண்ணினேன்.
>
> ச.அகிலாண்டேஸ்வரி
> இளம் கணினி முதல்

"டியூஸ்டே. இது தெரியாதா?" என்றான் ஆசி. தான் போட்ட காபியை நீட்டிக்கொண்டே.

அவனை முறைத்தவாறே இளன் "இன்று 55 சுதந்திர தினத்தை முன்னிட்டு நம்ம காலேஜ்ல நடந்த விழாவில் முன்னாள் **VICE PRINCIPAL** திரு. கே.வி.எஸ் சார்தான் சீப் கெஸ்டா வந்திருந்தார். தமிழ்பற்றை பற்றி அவர் கூறினார் பாரு. தமிழே தெரியாதவங்களுக்குகூட தமிழ் மேல் அவ்வளவு பற்று வரும்." இன்னும் எவ்வளவு தெரியுமா பேசினாரு?. . . "கர்நாடகாவுல **$H_2O$** ன்னு ஒரு படம் ரிலீஸ் பண்ணிணாங்களாம்"

"என்ன **$H_2O$** வா? தண்ணின்னு ஒரு படமா?" குறுக்கிட்டான் ஆசி.

"அட, அந்தப் படத்துக்கு அப்படி அர்த்தம் இல்லையாம். அது ஒரு முக்கோணக் காதல் கதையாம். கதாநாயகி கன்னடம் பேசுவாளாம். ஹீரோ இரண்டு பேராம். ஒருத்தர் கன்னடமும், இன்னொருத்தர் தமிழும் பேசுவாரர்களாம்."

"அப்ப கன்னட ஹீரோதான் ஜெயிப்பார்னு சொல்லு" என்று ஆசி கூற

"பிரச்சனை அது இல்லயாம்!" என்று கூறிய இளன் தொடர்ந்தான்.

"கன்னடப் படத்துல எப்படி தமிழ் மொழி பேசலாம்னு ரசிகர்கள் கலவரத்தில் ஈடுபட்டார்களாம்."

"அப்புறம்"

"அதுமட்டுமா? பார்லிமெண்ட்டைக் கூடத் தமிழ்ல பாராளுமன்றம் என்பதற்குப் பதிலாக, "பேசிதீர்க்கும் மன்றம்னு" தமிழ்ப்படுத்தியிருக்கார்".

"அப்ப நிறைய செய்தி கூறியிருக்கார்னு சொல்லுங்க", என்றான் வாசி.

"ஆமாம்! போன வாரம் ஜே.சி.சி. மாநாட்டுக்காக மன்னார்குடிக்கு போயிருந்தீங்களே என்னப்பா ஆச்சு?" என்று சுவாரஸ்யமாக கேட்டான் இளன்.

"அதுவக்க, அங்க நம்ம மிமிக்ரி தாமு வந்திருந்தார், அவரை நமக்குப் பலகுரல் மன்னனாக மட்டும்தான் தெரியும் ஆனால் அவருக்குள் சோகமான இன்னொரு முகமும் உண்டு. அதைக் கேட்டா எல்லோருக்குமே கண் கலங்கிவிடும்."

"அப்படி என்ன சோகம் அவருக்கு?" என்று இளன் பரிதாபமாகக் கேட்க,

"அவங்க அம்மாவுக்குக் காது கேட்காதாம். இவரு மிமிக்கிரி பண்றதை அவர் அம்மா கேட்டதேயில்லையாம். கட்டாயம் ஒரு நாள் அவங்க அம்மாவுக்குக் காது கேட்கத்தான் போகுது அப்படி நடந்தால் தாமுவை விட வேறு யாரு அதை நினைத்து சந்தோஷப்பட முடியும்?"

"அதைக் கேட்டதும், உயராத புருவங்களே இல்லை. அது மட்டுமா நம்ம மயிலாடுதுறை இளைய ஜேசிஸ் சேம்பருக்குச் சிறந்த பங்கேற்பாளருக்கான விருதும் கெடச்சது" சொல்லி முடித்தான் வாசி.

"ரொம்ப சந்தோஷமா இருக்கு கேட்பதற்கு", என்று இளன் கூற அப்போது கடிகார மணி ஒலித்தது.

"அட, மணி எட்டாயிட்டா? நான் சீக்கிரம் போகணும் அம்மா திட்டுவாங்க, அப்புறம் சந்திப்போம்" எனக்கூறி புறப்பட்டான் வாசி.●

சந்திப்புகள் தொடரும்





# மறுபிறப்பு

காதல் தோல்வி
காதலின் எமனாகப்
பெற்றோர்கள் . . .
வாழ்க்கையைத் துறக்க
தத்தெடுத்தான் தூக்குக்
கயிற்றை . .

அவன் கண்முன்
எதிர்காலத்தின் கருள் ஓடியது
தன் பெற்றோர்கள்
நோய்வாய்ப்பட்டு அனாதைகளாகக்
கண்ணீருடன் . . .

இதயம் வெடிக்க! அனாதையாக விட்டான்
தூக்குக் கயிற்றை
தத்தெடுத்தான் தன் பெற்றோரை
புதுவாழ்க்கை வாழ!

ச.கீதா
கணினிப் பயன்பாட்டியல் (இறை)

## ஜோக்

அப்பா: டேய்! நேத்தி நைட்டெல்லாம்
படிச்சன்ற ஆனா உன்னோட ரூம்ல
லைட்டே எரியலையே.

மகன்: படிச்ச இண்ட்ரஸ்ல
அதையெல்லாம் கவனிக்கலப்பா.

ம.விக்னேஷ்வரன்
இளம் வேதியல் (இடை)



இன்னும் இரண்டு வருடங்களில் நாடாளுமன்றத் தேர்தல். நாட்டின் எதிர்காலப் பிரதமரைத் தேர்ந்தெடுக்கும் உரிமை உங்களுக்கும் உண்டல்லவா? அப்படியென்றால் அதற்கு முன்பு இந்திய அரசியலமைப்பு பற்றிகொஞ்சம் தெரிஞ்சுகொள்ளுங்களேன். இதோ அதைபற்றிய ஒரு 'பிரச்சாரப்' பார்வை

- நம் நாட்டில் நாடாளுமன்ற (M.P) சட்டமன்ற (MLA) உறுப்பினர்களை மட்டுமே மக்கள் நேரடியாகத் தேர்ந்தெடுக்கிறார்கள்.

- நாட்டின் தலைவராகிய குடியரசுத்தலைவர் மக்களின் பிரதிநிதிகளால் மறைமுக வாக்கெடுப்பு மூலம் (யூனியன் பிரதேச சட்டமன்றமும்) தேர்ந்தெடுக்கப்படுவர்.

- இந்திய அரசியலமைப்பின் படி நாடாளுமன்றத்துக்கும், மாநில சட்டமன்றங்களுக்கும் ஐந்து ஆண்டுகளுக்கு ஒரு முறை பொதுத் தேர்தல் நடைபெறுகிறது.

- இந்தியக் குடிமகனுக்கு வாக்குரிமை வயது 18. ஆனால், 25 வயதாகும் வரை இவர்கள் சட்டமன்ற, மக்களவைத் தேர்தல்களில் போட்டியிட முடியாது.

- குடியரசுத் தலைவர், குடியரசுத் துணைத்தலைவர், மாநிலங்களவை உறுப்பினர், சட்ட மேலவை உறுப்பினர் ஆகிய பதவிகளுக்கும் மாநில ஆளுநராக நியமிக்கவும் வரையறுக்கப்பட்ட குறைந்தபட்ச வயது வரம்பு 35.

- பதிவான வாக்குகளில் 10% வேட்பாளர் பெறத் தவறினால் டெபாசிட் இழக்க நேரிடும்.





- ஒவ்வொரு பஞ்சாயத்து மற்றும் நகராட்சிக்கான நேரடித் தேர்தல்களில் மூன்றில் ஒன்றுக்குக் குறையாத இடங்கள் பெண்களுக்கு ஒதுக்கப்பட வேண்டுமென்று இந்திய அரசியலமைப்பு கூறுகிறது.

- இந்திய அரசியலமைப்பின் படி ஏற்படுத்தப்பட்ட சுயேட்சையான தேர்தல் ஆணையம் தான் நாடாளுமன்றம், சட்டமன்றத் தேர்தல்களை நடத்துகிறது.

- நாடாளுமன்ற, சட்டமன்றத் தேர்தல்களில் போட்டியிடுவோர் இந்த அளவிற்குத்தான் செலவிடலாம் என்ற வரம்பு இந்தியாவில் உள்ளது. மேலும், தேர்தலின் போது டி.வி., ரேடியோ மூலமாகப் பிரச்சாரம் செய்ய அனைத்துக் கட்சிகளுக்கும் வாய்ப்பளிக்கப்படுகிறது.

> ஸ்கூல் லைப் கட்டுப்பாடு உடையது. ஆனால், காலேஜ் லைப் ஓரளவு . . .
>
> வேறு எந்த காலேஜ்லயும் இல்லாத சிறப்பம்சம் இந்தக் காலேஜ்ல இருக்கு.
>
> இந்த கோர்ஸ் தேர்ந்தெடுத்ததன் நோக்கம் பிசினஸ் செய்வதற்காக.
>
> ஆ.மோகனா
>
> இளம் வணிகவியல் (முதல்)

- இந்தியாவில் ஒரு கட்சியிலிருந்து மூன்றில் ஒரு பங்கிற்கும் குறைவாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் கட்சி மாற முனைவது, கட்சித் தாவலாகக் கருதப்படும். கட்சித் தாவல் தடைச் சட்டத்தின் கீழ் சட்டமன்ற உறுப்பினர் பதவி பறிபோகும்.

- மூன்றில் ஒரு பங்கிற்கும் அதிகமான உறுப்பினர்கள் விரும்பினால் பிரிந்து சென்று தனிக்கட்சி ஆரம்பிக்கவோ, வேறு கட்சியுடன் இணையவோ உரிமை உண்டு.

- நாடாளுமன்றத்தின் ஒவ்வொரு அவையிலும் மூன்றில் ஒரு பங்கு உறுப்பினர் மாற்றங்களுக்கு ஆதரவு தெரிவிக்குமானால், இந்திய அரசியலமைப்பு அம்மாற்றங்களைக் கொண்டு வரலாம்.

- நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள் ஊதியம் பெறும் பிற பணிகளில் எதையும் வகிக்கக் கூடாது என்ற கட்டுப்பாடு உண்டு. மேலும் இவ்வாறான அன்பளிப்புகளை வழங்க முற்படுதலும், வாங்குதலும்) லஞ்ச ஊழலாகக் கருதப்படுகிறது.
- "லோக்பால்" என்ற பெயரில் இந்தியாவில் ஆம்புட்ஸ்மென் அமைப்பைத் தோற்றுவிக்க ஏற்பாடுகள் நடைபெற்றன. ஆனால், இந்த அமைப்பு இன்னும் உருவாகவில்லை.
- இந்தியாவில் குடியிருக்கும் அன்னியர்களுக்கு, வாக்குரிமை உள்ளிட்ட அரசியலில் பங்கேற்கும் உரிமையைத் தவிர மற்ற அனைத்து அடிப்படை உரிமைகளும், சுதந்திரங்களும் உண்டு.

**SCHOOL** ல்ல யூனிபார்ம் உண்டு. ஆனால் இங்கு அது இல்லை. இரண்டு இடத்திலுமே நல்லா படிச்சாதான் மார்க் வாங்க முடியும்.

நான் ஏ.வி.சி. கல்லூரி பற்றி எல்லோரிடமும் கேட்ட போது நல்ல காலேஜ், கோச்சிங் நன்றாக இருக்கும் என்றார்கள்.

**CHEMISTRY** எனக்கு ரொம்ப பிடித்த சப்ஜெக்ட்.

வி.மெர்லின்
இளம் வேதியல் முதலா

- இந்திய அரசியலமைப்பில் அடிப்படை உரிமைகள் என்ற ஒரு அத்தியாயம் சேர்க்கப்பட்டு உலகளாவிய மனித உரிமைப் பிரகடனத்திலுள்ள கிட்டத்தட்ட அனைத்து உரிமைகளுக்கும் உத்திரவாதம் அளிக்கப்பட்டுள்ளது.
- இந்தியாவில் மனித உரிமை மீறல்களைக் கண்காணிப்பதற்காகத் தேசிய மனித உரிமைக் கமிஷன் என்ற சுயேட்சையான அமைப்பு உள்ளது.
- மனித உரிமைகள் பற்றிய முக்கியமான அம்சங்களும், இவற்றைப் பேணுவதில் உலக நாடுகளுக்கு உள்ள கடமைகளும், 1993 ஜுன் மாதம் வியன்னாவில் நடைபெற்ற உலக மனித உரிமைகள் மாநாட்டில் திட்ட வட்டமாக உறுதிப்படுத்தப்பட்டன.

நன்றி : டேவிட் பீதம்
கெவின் பாய்லே





☎ : 221143

மயிலாடுதுறையின்

புதிய காலணிகளின் தனி

உலகம்

# சூப்பர்வாக்

Bata Action LIBERTY

**ஸ்கூல் பேக், காலேஜ் பேக், லேடீஸ் பேன்ஸி பேக், இவை அனைத்தும் குறைந்த விலையில் உயர்ந்த தரத்தில் கிடைக்கும்.**

185, பட்டமங்கலத்தெரு,
மயிலாடுதுறை.

For Computer Training Courses,
Sales & Service . . . .

**BASE COMPUTERS**

For Personality Development Courses
Individual / Corporate . . . .

**BASE INSTITUTE OF MANAGEMENT**

For School & College Students Private
Tuition (All subjects) . . . .

**BASE TUITION CENTRE**

FOR FURTHER DETAILS CONTACT . . . .

Jci Sen. Rtn. **V.Raman**
Director - Base Institutions

103, Mahadhana street, Mayiladuthurai - 609 001
☎ : 222355, 224855 Cell : 98424 - 24855








# முகவரி

இன்டர்நெட்டில் நாளுக்கு நாள் வசதிகள் பெருகிக் கொண்டே வருகின்றன. உங்கள் அன்றாட வாழ்வில் இன்டர்நெட்டின் சாதகமான அம்சங்கள் நுழைய ஆரம்பித்து விட்டன.

எல்.ஐ.சி. பில்லை ஆன் லைனில் கட்ட சில வங்கிகள் ஏற்பாடு செய்துள்ளன. சில தேர்ந்தெடுக்கப்பட்ட நகரங்களில் மின்சாரக் கட்டணம் கூட ஆன் லைனிலேயே கட்டப்படுகிறது. வாய்ஸ்மெயில் மூலம் குறைந்த கட்டணத்தில் பேசலாம். இதெல்லாம் இன்டர்நெட் நம்மை நெருங்கி வருகிறது என்பதற்கு உதாரணங்கள். எதிர்காலத்தில் இன்டர்நெட் நம்மை ஆட்சி புரியும் என்பதற்கு இன்னும் எத்தனையோ விளக்கங்களை நீங்கள் தரலாம்.

நெட்டீஸ்வரன்
ஆசிரியர் குழு

இன்டர்நெட் என்றதும் பலருக்கு சில குறிப்பிட்ட வெப் தளங்களின் முகவரி மட்டும் தான் நினைவிற்கு வரும். அதிலுல்ல பல பயனுள்ள தகவல்களை நாம் அறிவதில்லை, "சரி, நம்மில் எத்தனை பேருக்கு இந்தியாவைப் பற்றி முழுவிவரங்கள் தெரியும்", இதுபோல் எத்தனையோ உள்ளன.

இந்தியாவைப் பற்றிய புள்ளி விபரங்களைத் துறை வாரியாகத் தரும் தளங்கள் இதோ

விவசாயத் துறையில் இந்தியப் புள்ளி விபரங்களை அள்ளி வீசும் தளம். www.indiaagristat.com இந்தத் தளத்தில் முக்கிய விவசாயப் பயிர்கள் இடம் பெற்றுள்ளன. இதே போல் மக்கள் தொகை, பாலினவிகிதம், கல்வி, மொழி, தொழிலாளர்கள் என்று எண்ணற்றத் தளங்கள் இங்கு நமக்குக் கிடைக்கின்றன. முகவரி www.indiademographics.com இந்தியப் பொருளாதார வங்கிகள், பொதுநிதி, திட்டங்கள், வெளிநாட்டு வர்த்தகம், குறித்த தகவல்களை நாம் அறியச் செல்ல வேண்டிய தளம் http://www.indiaeconomicstat.com

இந்திய உள் கட்ட அமைப்பு வசதி குறிப்பாகப் போக்குவரத்து, நிலக்கரி, தொலைத்தொடர்பு பெட்ரோலியம் உள்ளிட்ட தகவல்களைத் தரும் தளம் http://www.indiainfrastat.com

இந்திய நகரங்கள் குறித்த புள்ளி விபரங்களை நீங்கள் பெற செல்ல வேண்டிய தளம் www.indiaurbanstat.com

இதேபோல் இந்திய கிராமப்புறங்கள் குறித்த தகவல்கள்தரும் தளம் www.Indiaruralstat.com

இந்தியத் தொழில் துறை குறித்த தகவல்களை நாம் பெற செல்ல வேண்டிய தளம் www.Indiaindustrystat.com

இந்தியப் பெண்கள் நிலை குறித்த புள்ளி விவரங்களை நீங்கள் பெறச் செல்ல வேண்டியத் தளம் www.Indiawomanstat.com

இதேபோல் இந்தியக் குழந்தைகள் குறித்து அறிய www.Indiachildrenstat.com

இந்தியச் சுற்றுச்சூழல் குறித்து நீங்கள் அறிந்து கொள்ள www.Indiaenvironstat.com

இந்தியாவைப் பற்றிச் சொன்னீர்கள், தமிழகத்தைப் பற்றி என்று நீங்கள் கேட்கவே வேண்டாம் நாங்களே சொல்கிறோம்.

தமிழக அரசின் அதிகாரப்பூர்வ பொது முகவரி : www.tn.gov.in/ மற்றும்துறைவாரியான முகவரிகள், சென்னைகார்ப்பரேஷனின் முகவரி: www.chennaicorporation.com/

தமிழக பொதுத் (தேர்தல்) துறையின் முகவரி:www.tn.gov.in/elections/ நீர்வள நிறுவனதின் முகவரி:http://www.tn.gov.in/citizen/iws.htm





தமிழக மின்வாரியத்தில் ஆன்லைனிலேயே உங்கள் புகார்களைத் தெரிவிக்க வசதிசெய்யப்பட்டுள்ளது. இங்குள்ள படிவத்தில் உங்கள் புகார்களைத் தெரிவிக்கலாம். முகவரி:www.tneb.org/

தமிழக காவல்துறையின் முகவரிwww.tn.go.in/police

புத்தகங்களைத் தேடி கடைவீதியெல்லாம் அலைகிறோம் எங்களுக்கு ஏதாவது... என்று நீங்கள் முணுமுணுப்பது எங்கள் காதுகளில் கேட்கிறது. இதோ உங்களுக்காக...

புத்தகப் பிரியர்கள் தங்களுக்குத் தேவையான அரிய நூலைத் தேடி இனி கடைவீதியெல்லாம் அலையத் தேவையில்லை. தற்போதுள்ள இன்டர்நெட் யுகத்தில் பழங்காலத் தத்துவப்புத்தகம் முதல் நவீன ஈ-காமர்ஸ் புத்தகம் வரை ஆன்லையனில் வாங்கிப் பயன் அடையலாம். இந்து தரும சாஸ்திரங்கள், ஞானிகளின் தத்துவங்கள், சமய நூல்கள், பிரபலங்களின் சுயசரிதை மற்றும் வரலாற்றை எடுத்துரைக்கும் சிறப்புப் புத்தகங்களை இன்டர்நெட்டில் படித்து மகிழலாம் தவிர, பள்ளி, பல்கலைக்கழக மாணவர்களுக்கான பாடப் புத்தகங்கள், சட்டம், இலக்கியம், அகராதிகள், நகைச்சுவை, சினிமா என அனைத்துத் துறை புத்தகங்கள் பற்றிய தகவல்களை பல்வேறு தளங்கள் வாரி வழங்குகின்றன.

www.amazon.com உலகில் மாபெரும் ஆன்லைனின் புக்ஸ்டோரான அமேசான் இன்டர்நெட் உலகில் ஜாம்பவனாகத் திகழ்கிறது. உலகின் பல்வேறு வெப் தளங்களுடன் , இந்த "சைட் லிங்க்" வசதியைப் பெற்றுள்ளது. ஆர்.கே.நாராயண் புத்தகங்கள் முதல் அருந்ததிராயின் புத்தகங்கள் வரை இங்கு உங்களுக்குக் கிடைக்கிறது.

தலைப்பு, ஆசிரியர், பாடப்பிரிவு மற்றும் சர்வதேச புத்தக எண் ஆகிய அடிப்படைகளில் நீங்கள் புத்தகங்களைத் தேடலாம்.

# Hearty Welcome to

# A.V.C.C. CANTEEN



Contractor :sz.muthuraj






www.borders.com சைட் நெட் பிரியர்கள் பதிவு செய்தபின் புத்தகங்களை விற்கிறது. புத்தகங்களை இன்டர்நெட்டில் வாங்க நீங்கள் கிரிடிட் கார்டு வைத்திருக்க வேண்டும்.

கிரிடிட் கார்டு விவரங்களைக் கொடுத்து உங்களுடைய வீட்டு முகவரியையும் நீங்கள் கொடுக்க வேண்டும். நீங்கள் தேர்தெடுத்த புத்தகத்தை அவர்கள் அனுப்பி வைப்பார்கள்.

நீங்கள் பார்க்க வேண்டிய பிற வெப் தளங்கள்:

| | |
|---|---|
| www.dnai.com/~ochobbit | www.photoeye.com |
| www.bigwords.com | www.ibcindia.com |
| www.dcbooks.com | www.fatboain.com |
| www.powellbooks.com | www.netbooks.com |
| www.rake.com | www.paicoindia.com |

சரி, ஆன்லைனில் படிக்கும் போது சிலவார்த்தைகளுக்கு அர்த்தம் பார்க்க வேண்டும் என்றால் என்ன செய்வது. . . கொஞ்சம் சொல்லுங்களேன்...

அன்லைனில் தங்களுக்கு வேண்டிய தகவல்களைக் படிக்கும்போது சில வார்த்தைகளுக்கு அர்த்தம் தெரியாமல் போகிறது. அருகில் டிக்ஸ்னரி இல்லாவிட்டாலும் நீங்கள் கவலைபடப் வேண்டியதேயில்லை. ஆன்லைனிலேயே கேம்ப்ரிட்ஜ் டிக்ஸ்னரி வார்த்தைகளுக்கு அர்த்தம் தரக்காத்துள்ளது. முகவரி : http:// dictionary.caambridge.org/ இந்தத் தளம் பயன்படுத்துபவர்களுக்கு மிகவும் எளிதாக உள்ளது. முதல் பக்கத்தில் காணப்படும் சர்ச் பகுதியில் நீங்கள் வார்த்தையைக் கொடுத்தால் அதற்கான அர்த்தத்தை நொடியில் கொடுக்கிறது இந்த டிக்ஸ்னரி.

ஆன்லைனில் வார்த்தைகளுக்கு அர்த்தம் தரும் மற்றொரு முன்னனி தளம். http:// www.dictionary.com/ ஆன்லைனில் பிரெஞ்ச், ஜெர்மனி உள்ளிட்ட மொழிகளிலிருந்து ஆங்கில மொழிக்கு நீங்கள் அர்த்தம் பார்க்கச் செல்ல வேண்டியத் தளம். http:// www.onelook.com

(முகவரிகள்) - தொடரும் . . .

# தேர்தல்


மக்களுக்காக வரவிருக்கிறது எலக்ஷன்!
மக்கள்தான் செய்ய வேண்டும் செலக்ஷன்!
தேர்ந்தெடுப்பதில் ஏற்படுமா கன்பியூஷன்!
இருக்குமா? நிலையான கான்ஸ்டிடியூஷன்!

ப.திவ்யா
இளம் கணினிப்பயன்பாட்டியல் (முதல்)

# புதைந்த நினைவுகள்

தாஜ்மஹால் போல் ஒரு
கல்லறை என்னுள்ளும்,
கல்லறையாய் இங்கு
உன் நினைவுகள்...

ப.சந்திரபாபு
இளம் வரலாறு (இடை)




பூவோடு பேச வண்டாக வேண்டும்,
காற்றோடு பேச இசையாக வேண்டும்,
கடலோடு பேச அலையாக வேண்டும்,
இரவோடு பேச நிலவாக வேண்டும்,
நாம் வருங்கால சமுதாயத்தில் பேச
கல்வி வேண்டும்.

ஏ.மாதவன்
இளம் [illegible]







# தேடிக் கொண்டிருக்கிறேன் விடியலை

பள்ளிச் சிறுவனின் கையில் 'காதல் புத்தகம்',
ஒய்யார அழகிகளின் 'இரவு அவலங்கள்',
குடிமகனுக்குச் 'சலுகை விலைக் குறைப்பு',
சகோதரத்துவம் பேசும் நாட்டில் 'ஜாதி வேற்றுமை',
குடும்பப் பெண்களின் கையில் 'டி.வி ரிமோட்'
அரசியல்வாதியின் 'பந்தா பேச்சுரிமை',
"ஜாதியை அழிப்போம்" எனக் கூறும்
ஜாதிச்சங்கத் தலைவர்,
'நாகரிகம்' என்ற பெயரில் பெண்களின் ஆடைக்குறைப்பு,
'வேற்று' நிலத்துக்காக அண்டை
நாடுகளிடையே போர்,
'சுயநலத்துக்காக' உயிரைக் கொல்லும் தீவிரவாதம்,
ஆமை வேகத்தில் 'அரசு வேலைவாய்ப்பு',
மக்களிடையே செய்தியை விளக்கிக் கூறும்
பத்திரிகையிடையே போட்டியும், பொறாமையும், 'உலக
சமாதானம்' கூறும் நாட்டில் உள்நாட்டுப் போர்,
வன்முறைக்கான கண்டுபிடிப்பு 'புது ரக ஏவுகணைகள்'.,
போதும்! போதும்! இவையெல்லாம் போதும் - மீண்டும்
அந்த ஆதாம், ஏவாள் காலம் எப்போது வரும்?
நானும் தேடிக்கொண்டிருக்கிறேன்,
அந்த அமைதி விடியலை நோக்கி
இருட்டில் இருந்து கொண்டே....

மோ.வேலுச்சாமி
இளம் வணிகவியல் (இறுதி)


கற்காலமும்




தற்காலமும்

## முரண்பாடு

சாதி மதம் இல்லையென்று
தலைவர் பேசினார் மேடையில்
மறுநாள் பஞ்சாயத்து
கலப்புத் திருமணத்திற்காக!

வி.உதயகுமார்
இளம் வணிகம் (இடை)

## அனாதை

எழுதியவர் யார் என்று தெரியவில்லை
பெறுகிறவர் யார் என்று தெரியவில்லை
இவர்கள் முகவரி இல்லாத கடிதங்கள்.

வி.மணிமேகலை
இளம் வேதியல் (இடை)

## 1 = 2

அவள் இதயத்தில் நான்கு அறைகளாம்
ஓரறையில் இடம் கொடு என்றேன்!
கொடுத்தாள்...
ஒன்றுக்கு பதிலாக இரண்டு
என் கன்னத்தில்! !

கா. வை.செந்தில்குமார்
இளம் வரலாறு (இடை)

## நட்பு

வட்டத்திற்குள் இருப்பது
அடிமைத்தனம்!
வட்டத்திற்கு வெளியே
சுதந்திரம்!
வட்டத்திற்குள்ளேயும் இல்லாமல்
வட்டத்திற்கு வெளியேயும்
இல்லாமல், இருப்பதுதான்
நட்பு!

டி.வனிதா
இளம் வணிகமேலாண்மை (நிறை)






# SUN SOFTWARE COLLEGE

Computer Education - Training division

SSC

SUN WIN THE WORLD

**JOIN SSC**

**GET PROFESSIONAL CARRIER**

C, C++, Java, Unix
VB, VC++, ASP, Oracle
All MultiMedia Course

Prog.2000: E \ Acad 2000
VLSI & Embedded
Accounting Package

Hardware & Networking Courses

**UG, PG, PROJECT**

**TAMILNADU COMPUTER EDUCATION DEVELOPMENT SCHEME**
IN PGDCA, PGD-E.COM, DCA, DIT.

Razak Tower, #15, Cutchery Road,
(Near Arunpriya Hospital)
Mayiladuthurai - 1 ☎: 226975

# உயர்வு வேண்டுமா?

கண்ணுக்குள் ஆயிரம் கனவுகள் - அவை
மண்ணுக்குள் புதைந்த உடல் போல
உனக்குள் இருக்கும் - அந்தக்
கனவுகள் வெளிவரத் துடிக்கும்
அப்பொழுது . . .
இளைஞனே! விழித்தெழு காலையைப்
போன்றவனே! கருமம் கை கூடும்
அதுவரை உழைத்துவிடு
உழைக்காமல் ஏற்றம் அடைந்தால்!
சுற்றம் உன்னைத் தூற்றும்
மரமேறத் தெரிந்தவனுக்கு
மாங்கனி கிட்டும்,
உழைத்து வாழ்பவனுக்கு
உயர்வு மட்டும் கதவைத் தட்டும்.

வா.ஸ்ரீதர்
இளம் கணினி (முதல்)




பிரிக்க நினைக்கும்
இதயத்தைக் கிழித்து
விடுவோம்!
பிடிவாதம் என்பதை
மனதை விட்டு
ஒழித்திடுவோம்!

ரா.அரிதாஸ்
இளம் வரலாறு (இடை)





# உங்களுக்கொரு வாய்ப்பு!

இளந்தூதுவில் உறுப்பினராகச் சேர விரும்புவோர் (மாணவ, மாணவிகள்) கீழ்க்காணும் விண்ணப்பத்தை நிரப்பி 10.10.2002- க்குள் ஆசிரியர் குழுவிடமோ, இளந்தூதுப் பெட்டியிலோ சேர்ப்பிக்கவும்.

பெயர் ..............................................

வகுப்பு ..............................................

பிறந்த தேதி ..............................................

முகவரி ..............................................

..............................................

தொலைப்பேசி எண் ..............................................

தந்தை பெயர் ..............................................

தொழில் ..............................................

பிற தகுதிகள் : கதை ☐ கவிதை ☐ கட்டுரை ☐

(இருந்தால் அந்தப் படைப்புகளை இந்த விண்ணப்பத்துடன் எழுதி இணைக்கவும்)

இதழியல் துறையில் முன் அனுபவம் (இருப்பின்)

..............................................

இளந்தூது பற்றித் தங்கள் கருத்துக்கள் ..............................................

..............................................

என் மகன்/மகள் கல்லூரிப் படிப்புடன் இளந்தூதுவில் சேர்ந்து பணியாற்ற நான் சம்மதிக்கிறேன்.


விண்ணப்பதாரர் கையொப்பம் பெற்றோர் / காப்பாளர்

(குறிப்பு : முதலாமாண்டு மாணவர்களுக்கு மட்டும். உறுப்பினர் சேர்க்கைக்கான முழு அதிகாரம் ஆசிரியர் குழுவிற்கு மட்டுமே.)

-ஆசிரியர் குழு

விக்கி: என்னடா! நக்கலா சிரிச்சிக்கிட்டே போற..

ஜக்கி: இல்ல... நாய் கூட சாப்பிடாத பஜ்ஜை எப்படி சாப்பிடுறான்னு நினைச்சேன்....



6 வித்தியாசத்திற்கான விடை : பக்கம் 95





# பின்லேடி

அன்று ....

வான் உயர்ந்த
இரட்டைக் கோபுரங்களைத் தகர்த்தது
ஒசாமா பின்லேடனாக இருக்கலாம் - ஆனால்

இன்று ....

என் காதல் கோட்டையைத் தகர்த்த
ஒசாமா பின்லேடி நீயல்லவா!

பி.கணேசன்
முதுநிலை தகவலியல் (இடை)

# காதல்

காதல் என்றாள் ....
காதலித்தேன்.
அன்பு தெரிந்தது - நான்
கல்யாணம் என்றேன் ....
பார்ப்போம் என்றாள்
தாடி தெரிந்தது

கு.சரவணன்
இளம் விலங்கியல் (முதல்)

# தற்கொலை

வாயுக்களின் கூட்டத்தில்
ஆக்ஸிஜன் வாயுவைத் - தவிர
மற்ற வாயுக்கள்
காணவில்லை? - என்னவளே
நீ ஆக்ஸிஜன் வாயுவை மட்டும்
உட்கொள்வதால்
மற்ற வாயுக்கள்
மனமுவந்து தற்கொலை
செய்து கொண்டனவோ ...

சத்ரியன் த.பிரபு
இளம் கணினி (இடை)

# கிராமத்துச் சங்கீதம்

"பாவிபய மக்கா இவன் பேரு தங்கம்
ஊர் மக்கா படிக்கிதுன்னு - இவனையும்
நான் படிக்க வைச்சேன்
பத்தாம் வகுப்பு வரை பாத மாறிப் போகலையே!
முன்னுகட்டு கட்டியாச்சும் கரைசேர்க்க
எண்ணம் வச்சேன், பரதேசிப் பய புள்ள
பாத மாறி போகுதுங்க! முன்னுகட்டப் போகையிலே
சொல்லுக்கட்டு கட்டி வந்தேன்,
உவை வாயை அடக்கினாலும், ஊர் வாய அடக்கமுல்ல
அத்தனையும் அடக்கிகிட்டு அன்போட வளர்த்துவந்தா;
அரைப் படத்த தேடிகிட்டு அல்லும் பகலும் அலையறாங்க,
உதவாகரப் புள்ள ஊர்த்தானே சுத்துன்னு
வெள்ளப் புடவகாரி நான் என்ன செய்யறது?
பணம் காசு இருந்தப்ப பந்தமுன்னு சொன்னவனெல்லாம்
பரதேசிப் பயலின்னு பயங்கரமா பேசுறாங்க...
சாக்கடையும் ஒரு நாளு சமுத்திரத்தில் சேருங்க,
அதுபோல எம்மவராசன் பெத்தபுள்ள
என்னக்கித்தான் திருந்துமோ
அந்தக் கடவுள் தான் திருத்துமோ".

ஆர் நரசிம்மராஜன்
இளம் விலங்கியல் (முதல்)





CSC®
COMPUTER EDUCATION
QUALITY COMPUTER EDUCATION 16 Years Since 1986
With Best Complimentation




Watch Your Career take off...
in the College Studies
CSC Computer Education
1st Floor, Raj Building,
No. 64-65, Pattamangala St., Mayiladuthurai.
☎ : (04364) 220178

# அர்த்தமென்ன?



*சிரித்து சிரித்துப் பேசியபோது*
*சிதறியிருந்த சிந்தனைகள்*
*சிரிப்பின் அர்த்தத்தைச் சிந்திக்க*
*தொடங்கியது!*
*அவன் என்னிடம்*
*பேசாமல் இருந்தபோது....*

ஏ.கமாலியேல்
இளம் ஆங்கிலம் (இடை)

# தோழா

*உயிர்த் தோழன் என்ற வார்த்தைக்கு*
*உயிர் கொடுத்தவன் நீயாடா!*
*சிரிக்க வைத்தாய்!*
*ரசிக்க வைத்தாய்!*
*மனம் சலனப்படாமல்*
*உன்னை*
*நினைக்க வைத்தாய்!*
*நட்பின் நடுவே நீ புனிதனடா?*
*உயிர் எழுத்துக்களைத் தேடுகிறேன் தோழா*
*உயர்ந்த உன் நட்பை உலகம் வியக்க!*



க.ஜமுனா
இளம் வணிகம் (நிறை)





# மொழிப் பற்று

என்ன நண்பர்களே! தலைப்பைப் பார்த்த உடனேயே வேறு எதையாவது படிக்கலாமே என்று பக்கத்தைத் திருப்பத் தோன்றுகிறதா? கண்டிப்பாகத் தோன்றும் ஏனெனில் மொழிப்பாடத்தைப் பற்றி நம்மில் பலருக்குத் தவறான எண்ணமே உள்ளது.

மேல்நிலைப் பள்ளியில் தொழிற்கல்வி மற்றும் மருத்துவமும் படிக்கப் போகும் மாணவர்களை மொழிப் பாடத்தில் கவனம் செலுத்த வேண்டாம் என்று பலர் சொல்லக் கேட்டிருக்கிறேன்.

என் தோழிகள் தேர்விற்கு முதல்நாள்தான் தமிழ், ஆங்கலப் புத்தகத்தை எடுப்போம் என்று சொல்லக் கேட்டிருக்கிறேன் (நான் மட்டும் இதற்கு விதிவிலக்கல்ல) மொழிப்பாடம் என்பது எதற்காகக் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஒருவரின் கருத்துக்களும், எண்ணங்களும் அடுத்தவருக்குத் தெரிய வருவது மொழி மூலமாகத்தான்.

பா.சந்திரலேகா
இளம் மின்னனுவியல் (முதல்)

ஒருவரின் வெளித்தோற்றத்தால் மட்டும் அவரது அறிவுத்திறனை கணிக்க இயலாது. அவரது பேச்சுத்திறன், ஒரு செய்தியைச் சொல்லும் பாங்கு, அவர் யார்? என்பதை மற்றவருக்குத் தெரிவிக்கிறது. தமிழ் நமக்குத் தாய்மொழியாக இருக்கின்ற போதிலும் நம்மில் பலருக்குத் தமிழ் சரியாக எழுதத் தெரியாது. நமக்கு இது பெரிய இழுக்கு அல்லவா?

ஒரு மனிதனைத் தெளிவாகச் சிந்திக்கத் தூண்டுவது, துணை புரிவது மொழிப்பாடமே ஆகும்.

விடலைப் பருவத்தில் சரியான வழிகாட்டுதலைக் கொடுத்துப் பாதை மாறாமல் பல மாணவர்களைச் செம்மைப் படுத்த மொழிப் பாட ஆசிரியரின் கவிதைகளும், கட்டுரைகளும் துணைபுரியும்.

ஆகவே நாம் மொழிப்பாடத்தை மதிப்பெண்களுக்காக அல்லாமல், நம் வாழ்க்கைக்காகவும் கற்போமே!

## அழகில்லை

நிலவைத் தீண்டாதவரை
மேகம் அழகில்லை!
பூமியைத் தீண்டாதவரை
மழையும் அழகில்லை!
மலரைத் தீண்டாதவரை
தென்றல் அழகில்லை!
அலைகள் தீண்டாதவரை
கடல் அழகில்லை!
நம்பிக்கை தீண்டாதவரை
நாமும் அழகில்லை!

ச.தேன்மொழி
இளம் நுண்ணுயிரியல் (இடை)







# மனித நேயம்

ஊரடங்கு ஊத்தரவிட்டு
உறைக்குள் உறங்கும் - உன்
தோட்டக்கள் மட்டும்
விழித்துக் கொண்டது!

உயிர் துடித்தும் உயிர்
பிரியும் வேதனைகள்
தோட்டாக்களுக்குத் தெரிந்திருந்தால்
உனக்குள்ள உணர்வுகள் - அது
அறிந்திருந்தால் உன்னையே
உறங்க வைத்திருக்கும்!

மனித நேயம் என்பதையே
மறந்து போய் மறத்துப்போய்
நடமாடும் மனிதனே!

மிருகமெல்லாம் மனிதனாக நடமாட
நீ மட்டும் மிருகமாகி விட்டாய்
நீ நீயாகவே இரு
இறக்கும்வரை மனிதநேயத்துடன் ....

வீ.கீதா
முதுநிலைத் தமிழ் (நிறை)

# APTECH
## PICK A PACK

- MS Office, MS Access, Internet
- HTML, DHTML, XML, ASP
- C, C++, Unix
- OOPS with Java
- VB with SQL Server 2000







- PACK 6 Visual C++ with MFC
- PACK 7 Hardware, Networking, OS

# JUST RS.2000 ONLY

Hurry Up ... Offer valid for Limited period Only!

# APTECH
## COMPUTER EDUCATION

Mayiladuthurai ☎ : 227606
Chidambaram ☎ : 23309

# சிக்னல்

"என்ன நாளை சந்திப்போமா" என்று வழக்கமான முடிவுடன் அன்றைய 'தினம் ஒரு திருக்குறள்' நிகழ்ச்சியை முடித்து விட்டு ஸ்டுடியோவை விட்டு வெளியே வந்தார் சாலமன் பாப்பையா.

அவசரமாக காரில் வீட்டுக்குச் சென்ற அவர் சிக்னலில் மாட்டிக்கொண்டார். டென்ஷனோடு வெளியில் பார்த்துக்கொண்டிருக்கு போது. "என்ன சார் இன்னைக்கு எந்தக் குறள்" என்ற ஒரு பழக்கமான குரலைக் கேட்டு திரும்பினார். "அட விவேக்கா! எப்படி இருக்க? சினிமாவுல தான் என்னை நக்கல் பண்றேன்னா நேரிலகூடவா?" "என்ன சார் சொல்றீங்க? நான் சாதாரணமாகத்தான் சார் கேட்டேன், சீரியஸா எடுத்துக்காதீங்க"



"பரவாயில்லை, உன் மூலமா பப்ளிசிட்டியும் கிடைக்குதே." விவேக் அந்த பக்கம் திரும்பி சிரிக்கின்றார். பாப்பையா ஒரு மாதிரி விவேக்கைப் பார்த்து "என்னப்பா சிரிக்கிறமாதிரி இருக்கு?", "இல்ல சார்... நேத்துபூரா நைட் ஷீட்டிங், தூக்கமே இல்ல, அதான் கொட்டாவி வருது சார்!" "இல்லையே சமாளிக்கிற மாதிரி





இல்லையா இருக்கு" "எப்படி சார் கண்டுபிடிச்சீங்க" (பாப்பையா விவேக்கை முறைக்கின்றார்) "என்னப்பா இந்தப் பக்கம் உன்னை பார்க்கவே முடியறதில்லை இன்னிக்கு சிக்னல்ல ஆச்சிரியமா இருக்கு" "எங்க சார் எப்பபார்த்தாலும் ஷீட்டிங் ஷீட்டிங்ன்னு அலைஞ்சிட்டு இருக்கேன். பொண்டாட்டி புள்ளைங்க மூஞ்சியே மறந்து போச்சு சார்." "என்ன மட்டும் மறக்கலையா கண்டுபிடிச்சிட்டே" எப்படி சார் நான் காமெடி எழுதும் போதெல்லாம் உங்களை நினைச்சிட்டு தானே சார் எழுதுகிறேன்." பாப்பையா மெய் சிலிர்கிறார்.

விவேக்கின் உதவியாளருக்கு அர்த்தம் தெரிந்து அவர் தனியாக சிரிக்கிறார். " அதெல்லாம் சரிய்யா ஏன்யா என்ன போட்டு இந்தப் பாடு படுத்துற சினிமாவுல" "நீங்க வேற சார் எங்க டைரக்டரே திருக்குறள் எழுதுனது நிஜமாவே நீங்கதான்னு நினைச்சுட்டு இருந்தாரு, நான் சொல்லிதான் வரதராஜன்னு தெரியும்"



"அடப்பாவிகளா திருக்குறள் எழுதினது வரதராஜனா? திருக்குறளை எழுதினது திருவள்ளுவர். திருக்குறளுக்குத் தமிழில் தெளிவுரை விளக்கம் எழுதியது தான் வரதராஜன்" இது கூடத் தெரியல அந்த பையன் நம்மல பத்தி சினிமாவுல ரீல் விடறான். பாப்பையா நொந்து கொள்கிறார்.

உரிமை : **ஜி. வாசுதேவன்**

☎ வீடு : 225841
கடை: 221210

அழகான வீட்டுக் கதவுகளுக்கு மரத்தில்
அழகிய பூ வேலை செய்ய

## நியு திருச்சி கார்விங்





மாடிப்படிகால் கடைசல்
நவீன இயந்திரம் மூலம் செய்யப்படும்

**H.O.: 99, பூக்கடைத் தெரு கூறைநாடு.
மயிலாடுதுறை - 609 002.**

**B.O.: 58/2, பாரதியார் ரோடு, (நகராட்சி திருமண
மண்டபம் அருகில்) காரைக்கால் - 609 602**





"அப்படியா சார்! நல்லவேளை சொன்னீங்.. ஒரு நிமிஷம்" தன் உதவியாளரை அழைக்கின்றார் விவேக். "ஏன்பா இன்னிக்கு ஷீட்டிங்ல 'டயலாக் ஸ்கிரிப்ட்'டில் வரதராசன்னு எழுதியிருப்பேன். அத திருத்தி திருவள்ளுவர்னு மாத்திக்கப்பா" என்றபடி பாப்பையாவைப் பார்க்கிறார்.

பாப்பையா ஆடிப் போனார். இதற்கு நான் சொல்லாமலேயே இருந்திருப்பேன் என நினைத்துக் கொள்கின்றார். "என்னப்பா! வரதராஜன்னு. சொல்ற அப்ப என் பெயரும் இருக்கும்னு நினைக்கிறேன்".

"என்ன சார் உங்கள போய்.... அதெல்லாம் முடிஞ்சி போச்சு சார்" சொல்லிக் கொண்டிருக்கும் போதே விவேக்கின் உதவியாளர் மீண்டும் வருகிறார்.

"சார் வரதராஜன்கிற பேரை மாத்தினா மட்டும் போதும்ல சார், சாலமன் பாப்பையா என்ற பேரை மாத்த வேண்டாம்ல சார்" விவேக் என்ன செய்வது என்று தெரியாமல் விழிக்க பாப்பையா விவேக்கைச் சிரிக்கும் பார்வையுடன் பார்க்க, விவேக் அவசரமாக அங்கிருந்து கழண்டு கொண்டு ஒரு காரில் ஏற, உள்ளே மாத்ருபூதம், விவேக் பேய் அரைந்தது போல....

ஆனால் அதற்குள் பூதம் "அடப்பாவி நீயா சினிமாவுல என்னோட பெயரையே மாத்தி பாக்குறவங்களெல்லாம் உங்க பெயர் மாத்ரு பூதமா இல்ல 'லாட் லபக்தாஸா'ன்னு கேக்குறாங்க. உன்ன தான் தேடிக்கிட்டேயிருந்தேன்." என்று சொல்ல சிக்னல் விழுகிறது. காரிலிருந்து கிழே குதித்த விவேக் "நிறைய பேர் நம்ம மேல கோபமா இருக்காங்க. இனிமே வெளியில வரதுன்னா பூனைப் படையோடதான் வரனுன்னு" தனக்குத்தானே பேசிக்கொள்கிறார், பேசிக் கொண்டே தப்பித்தேன்! பிழைத்தேன்! என்று தன் காரை நோக்கி ஓடினார்.

**[illegible] விவேக் அவரைப் பார்த்து அதிர்ந்து போனார். யார் அந்த அவர்....?
அடுத்த [illegible] அவர் உங்களுக்காக......**

## தாய் மொழி

தமிழா!
தமிழை
தாயென்று சொல்லி
முதியோர் இல்லத்தில் சேர்த்திடாதே!

காரு பிரபு
இளசி இயற்பியல் (முதல்)

## ஹைக்கூ காரன்

## தீ

ராமர் என்றால் அயோத் (தீ)
குஜராத் என்றால் அய்யோ (தீ)
காஷ்மீர் என்றால் கலவரத்(தீ)
என்று தணியும் இந்த மதவெறித்(தீ)

வ.தம்பிஞானதயாளன்
முதுநிலை வணிகம் (நிறைவு)

## தாய்

பத்து மாத
வாடகை பாக்கிக்காக
வீட்டை விட்டு
வெளியேற்றிய
ஹவுஸ் ஓனர்!

பு.ஹரிநாராயணன்
முதுநிலை வேதியல் (இறுதி)

## நெரிசல்

அணுக்களின் இடப் பெயர்வு
உயிரின் ஒட்டத்தில்
நெரிசல்.

ஏ.வீரப்பாண்டியன்
இளம் இயற்பியல் (முதல்)





வாழ்த்துங்கள் - வளர்கிறோம் உங்களோடு . . . .

# 366 வது நாள்

பதிவு செய்யுங்கள் . . . . பரிசுகளோடு செல்லுங்கள். . .

Live - Projects
U.S.A. Certificate
ON-LINE Exam
Extra Lab
24 Hrs Lab Facility

COMP-U-LEARN®
Setting Standards in Technology
#10-A, Cutchery Road, Opp Fire Service,
Mayiladuthurai- Tel : 229182

100% EDUCATION

50% OFFER

**Full Time Job**
**After Course**
**Part-Time Job During Course**
**Well Trained Faculties**
**Book Materials for Lab, Theory &**
**a Guide Tour (for every subject)**

## WARNING

☎ : 240935

- உடல் எடை அதிகமா?
- ஆரம்ப சர்க்கரை வியாதி உள்ளவரா?
- உயர்ந்த அல்லது குறைந்த இரத்தஅழுத்தம் உள்ளவரா?
- வெளியில் செல்லாமல் வீட்டில் இருந்தபடியே உடற்பயிற்சி செய்யவேண்டுமா?



# சிந்தும் வியர்வை தீர்த்தமாகும்

கல்லூரியில் மூன்றாமாண்டு வேதியல் படித்து வந்தான் சிவா. சிவா என்றாலே கல்லூரியில் தெரியாதவர்களே இல்லை. நீங்கள் நினைப்பது போல் பெரிய படிப்பாளி இல்லை. வகுப்பை கட் அடித்துவிட்டு கேன்டீன் செல்வதும், தாராளமாக செலவு செய்வதும், பெண்களைக் கேலி செய்வதும், வகுப்புக்கு வருவதைப் பொழுதுபோக்காகவும் கொண்டிருந்தான்.

பள்ளிப் பருவத்தில் இருக்கும் இடமே தெரியாமல், படிப்பைத் தவிர வேறெதுவும் தெரியாதவனாக இருந்தவன் கல்லூரியில் நுழைந்தவுடன் சில தீய நண்பர்களுடன் சேர்ந்து தீயவனாகவே மாறி விட்டான். ஆண்டுகள் அனைத்தும் கடந்தனவே தவிர தாள்கள் அனைத்தும் நகரவே இல்லை.

எஸ்.மணிகண்டன்
முதுநிலை வேதியல் (நிறை)





தேர்வு முடிவுகள் வெளிவந்த அன்று முதலே அவனது வாழ்வில் புயல் வீசத் தொடங்கியது. வயலில் விளைந்த நெல்லை எல்லாம் படிப்பிற்காகவே விற்றுப் படிக்க வைத்த தாய், தந்தையர் மிகுந்த வேதனை அடைந்தனர். யாருக்கும் சாப்பிடப் பிடிக்கவில்லை. அவன் தாய் சதா அழுது கொண்டேயிருந்தாள். வீடே இழவு வீடு போல் காட்சியளித்தது. ஏற்கனவே சிவாவின் தந்தையும் நோய்வாய்ப் பட்டிருந்தார். தனக்கு வந்த நோயை டாக்டரிடம் காண்பிக்கப் பணம் இல்லாதபோதும், மகனின் படிப்பிற்குப் பணத்தைச் செலவழித்தார்.

இதனால் மன வேதனையடைந்த சிவாவின் தந்தையின் உடல்நிலை மிகவும் மோசமானது. மருத்துவமனைக்குச் சென்ற பத்து நாட்களில் இறந்து போனார்.

குடும்பப் பொறுப்பு முழுவதும் சிவாவின் தலையில் விழுந்தது. வேலை தேடிக் கம்பெனிகளுக்கு ஏறி, இறங்கியது தான் மிச்சம். இவன் படிப்பை முடிக்காததால் யாரும் வேலைத்தரத் தயாராக இல்லை. சிவாவின் சிந்தனையில் முதலாவதாகத் திருமண வயதுவந்த தங்கை, வீட்டுக் கடன்கள் தோன்றின. இவற்றை நினைத்தவாறே தூங்கிப் போனான்.

> பள்ளி வாழ்க்கையில் ஆசிரியர்களின் கண்டிப்பின் காரணமாகச் சகோதரத்தன்மை கிடைக்கவில்லை. ஆனால் கல்லூரி வாழ்க்கையில் அப்படிப்பட்ட நிலை கிடையாது என்பது முதல் நாள் அன்றே தெரிந்தது.
>
> இக்கல்லூரியில் படித்துதான் என் உறவினர்கள் பலர் சிறந்த வேலையில் நல்ல நிலையில் இருப்பதால் நானும் இக்கல்லூரியைத் தேர்ந்தெடுத்தேன்.
>
> இப்பிரிவு மிகவும் சிறந்த பிரிவு. மேலும் இப்பிரிவைப் பயின்றால் வெளிநாட்டில் வேலைவாய்ப்பு அதிகம்.
>
> க.பஞ்சநாதன்
> இளம் கணினி முதல்

ஐந்தரை மணியளவில் தனது வயக்காட்டிற்குச் சென்றான். இவனது வயலைத் தவிர்த்து மற்ற வயல்கள் எல்லாம் பச்சைபசேலெனக் காட்சியளித்தன. சில்லென்று வீசிய தென்றல் காற்று மனத்திற்கும், உடலுக்கும் இனிமையாய் இருந்தது.

கதிரவன் இருளை விரட்டியடித்துக் கொண்டிருந்தான். குளத்துத் தாமரை காதலனின் வரவைக் கண்டு முகம் மலர்ந்தது. இந்தக் காலை வேளையிலும் நாரை ஒன்று ஒன்றைக் காலில் வாய்க்கால் நீரில் நின்றுக் கொண்டு இறையின் மீது விழிவைத்திருந்தது. இந்த நாரை சிவாவின் கவனத்தை முழுவதுமாக ஈர்த்தது.

# JEECCorp

**Internet Browsing Rs. 25/- per hour**

JEECCorp Welcomes you to take part in
Gateway to our home town

Place your advertisements in
http://WWW.mayiladuthurai-info.com

## at free of cost

- Computer Education
- Internet Browsing
- Software Developments & Web desigining
- Hardware Sales Servicing & Maintanence

*Contact for more Details* : **J.STEPHEN RAJ**
Phone : 240654,242206,241955,242176
http://WWW.jeeccorp.com

"FLY HIGH : SKY IS THE LIMIT FOR US "

Project work under taken

## INIGO COMPUTER CENTRE

Offer courses for **Kids, School Students, College Students and Seniors** at reasonable rate.
We also offer projects for College Students

For Details Please Contact :

**INIGO COMPUTER CENTRE,**
**St. Xavier's Church Campus,**
**Gandhiji Road, Mayiladuthurai**
**☎ : 240654**





ஸ்ரீம் ☎ : 242015

# SHREEM READYMADE

**PASSION FOR FASHION**

43/1, Mahadhana Street,
Mayiladuthurai - 609 001

Authorised Dealer for

## oLive-inp Jeans

Live-in JEANS

- Tshirts
- shirts
- Trousers
- Perfumes
- Wallets
- Night Pants
- Bermudas
- Caps
- Belts

சூரியன் புல்மீது தூங்கும் பனித்துளியைத் தட்டி எழுப்பியவாறே மேலே எழுந்தான். நாரை இரண்டு மணி நேரம் ஆகியும் ஒரு மீனையும் பிடிக்கவில்லை.சிவாவின் நினைவில் தனது அப்பா இந்த நிலத்தில் விவசாயம் பார்த்துதான் குடும்பத்தையும், தனது படிப்புச் செலவையும் கவனித்துக் கொண்டார்.ஏன் பக்கத்து வீட்டு சுரேஷ் கூட விவசாயத்தால் உயர்ந்தவன் தானே. நாம் ஏன் விவசாயம் பார்க்கக்கூடாது விவசாயத்தில் ஈடுபடுவோம். நிச்சயமாக என்ற மன உறுதியுடன் வீட்டிற்குக் கிளம்பினான்.

> பள்ளிக்கும், கல்லூரிக்கும் எந்தவித வேறுபாடும் இல்லை. பள்ளியாக இருந்தால் என்ன, கல்லூரியாக இருந்தால் என்ன..நல்லா படிக்கணும் அவ்வளதாங்க.
>
> 3புகழ் பெற்ற நல்ல கல்லூரி. அதனால்தான் சேர்ந்தேன்.
>
> எனக்கு சிஏ. படிக்க ஆசை, So பி.காம், தேர்ந்தெடுத்தேன்.
>
> ச.கலைச்செல்வி
> இளம் வணிகம் முதல்

நாரை அப்போதுதான் ஒரு மீனைப் பிடித்த சந்தோஷத்தில் பறந்து மறைந்தது. நாரைக்கு நன்றி தெரிவித்தவனாகச் சிவா மண்வெட்டியை எடுத்து தோளில் மாட்டிக் கொண்டு வயலை நோக்கிப் புறப்பட்டான். அவன் நெற்றியில் சில வியர்வைத் துளிகள் அரும்பியிருந்தன.

இனி அவன் தினமும் சிந்தும் வியர்வை தீர்தமாகும். ஒரு நாள் வெற்றி அவனது விலாசத்தை விசாரிக்கும் ●


**தமிழ்நாடு அரசு**
**லஞ்ச ஒழிப்புத்துறை**

**லஞ்சம்** வாங்குவது சக மனிதனின் இரத்தம் குடிப்பது
கொடுப்பது சக மனிதனுக்கு விஷம் கொடுப்பது

உங்கள் மாவட்டத்தில் யாராவது லஞ்சம் கேட்டால் லஞ்ச ஒழிப்புத்துறை உங்களுக்கு உதவத் தயாராக உள்ளது. தயக்கமின்றித் தொடர்பு கொள்க.

| கடலூர் | நாகப்பட்டினம் | தஞ்சை | திருச்சி | சேலம் |
|---|---|---|---|---|
| (04142) 324816 | (04365) 45460 | (04362) 327100 | (0431) 420166 | (0427) 448735 |

பொது நலன் கருதி : JUNIOR JCS, A.V.C. COLLEGE, MANNAMPANDAL, MYD




# வேற்றுமையில் ஒற்றுமை

ஆப்ரகாம் லிங்கன் மற்றும் ஜான் கென்னடி இருவரும் அமெரிக்க அதிபர்களாக இருந்தவர்கள். இருவருக்குமிடையே காலம் கடந்த சில வித்தியாசமான ஒற்றுமைகள் அவை . . . .

## ஆப்ரகாம் லிங்கன்

- இவர் 1846 ஆம் ஆண்டு அமெரிக்க பாராளுமன்றத்திற்குத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.
- 1860 ஆம் ஆண்டு அமெரிக்க அதிபரானார்.
- இவரைத் தொடர்ந்து பதவிக்கு வந்த ஆண்ட்ரூ ஜான்சன் 1808 ஆம் ஆண்டு பிறந்தவர்.
- இவரைக் கொலை செய்த ஜான் வில்க்ஸ்பூத் என்பவர் 1839 ஆம் ஆண்டு பிறந்தவர்.
- இவரின் செயலாளராக கென்னடி என்பவர் இருந்தார்.
- இவர் "கென்னடி" என்ற தியேட்டரில் சுட்டுக் கொல்லப்பட்டார்.
- இவரைச் சுட்ட பூத் என்பவர் தியேட்டரிலிருந்து தப்பியோடி ஒரு கிட்டங்கியில் பிடிபட்டார்.

## ஜான் கென்னடி

- இவர் 1946 ஆம் ஆண்டு அமெரிக்க பாராளுமன்றத்திற்குத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.
- 1960 ஆம் ஆண்டு அமெரிக்க அதிபரானார்.
- இவரைத் தொடர்ந்து பதவிக்கு வந்த லிண்டன் ஜான்சன் 1908 ஆம் ஆண்டு பிறந்தவர்.
- இவரைக் கொலை செய்த லீ ஹார்வேஆஸ்வால்டு என்பவர் 1939 ஆம் ஆண்டு பிறந்தவர்.
- இவரின் செயலாளராக லிங்கன் என்பவர் இருந்தார்.
- இவர் "லிங்கன்" என்று அழைக்கப்படும் காரில் சுட்டுக் கொல்லப்பட்டார்.
- இவரைச் சுட்ட ஆஸ்வால்டு கிட்டங்கியிலிருந்து தப்பியோடி ஒரு தியேட்டரில் பிடிபட்டார்.

இரு அதிபர்களுமே வெள்ளிக்கிழமை சுடப்பட்டனர்.
இருவருமே தலையில் சுடப்பட்டனர்.
ஆங்கிலத்தில் லிங்கன் மற்றும் கென்னடி ஒவ்வொன்றும் ஏழு எழுத்துக்கள் உடையவை.
இருவருமே மனித உரிமைக்காகப் போராடியவர்கள்.
இருவரின் மனைவிகளுமே வெள்ளை மாளிகையில் வசித்தபோது ஒரு குழந்தையை இழந்தார்கள்.
இருகொலைகாரர்களுக்கும் மூன்று வார்த்தைகள் உடைய பெயர்.
இரண்டு கொலைகாரர்களின் பெயர்களும் 15 எழுத்துக்கள்.
இரு குற்றவாளிகளும் வழக்கு நடந்து கொண்டிருக்கும்போதே கொல்லப்பட்டனர்.

தொகுப்பு :

**G.SELVAM** ☎243095

# VEE YEN SPORTS

ALL KINDS OF SPORTS GOODS

# VEE YEN

TYPEWRITER SERVICE CENTER

ALL KINDS OF TYPERWRITERS

DUPLICATORS , SALES & SERVICE

9, 1st Floor, Lakshmi Vilas Complex,
Cutchery Road, Mayiladuthurai-609001.





## சிந்திக்க சில நிமிடங்கள் . .

- விடை எழுதுங்கள்
வித்தியாசமான பரிசை
வெல்லுங்கள்...

1. இந்தியாவின் பிரதமராக மூன்று முறை பதவியேற்றவர் யார்?
2. ஆகஸ்ட் 15 அன்று இந்தியா அல்லாது சுதந்திர விழா கொண்டாடும் நாடு எது?
3. 'ஹிரோஷிமா தினம்' என்று அனுசரிக்கப்படுகிறது?
4. 'மூன்றாவது உலகம்' என்று அழைக்கப்படுவது எது?
5. நெப்போலியன், முஹம்மது நபி, ஜார்ஜ் வாஷிங்டன், நெல்சன் ஆகியோரிடம் பொதுவாகக் காணப்படும் செய்தி என்ன?
6. உலகிலேயே ஒருவர் மட்டும் எண் பலகை இல்லாமலேயே கார் வைத்திருக்கிறார் அவர் யார்?
7. *"The Art of Cricket"* என்ற நூலை எழுதியவர் யார்?
8. பிரஞ்சுப் புரட்சியின் முக்கியமான கொள்கைகள் யாவை?
9. 'மதராஸ்' என்ற பெயர் எந்த ஆண்டு சென்னை என்று மாற்றப்பட்டது?
10. நம் கல்லூரியில் பட்டமேற் படிப்பு இல்லாத துறைகள் எவை?

பரிசுக் கூப்பன்

பெயர் ______________

______________

வகுப்பு ______________

பதிவு எண். ______________

<u>விடைகள்</u>

1. ______________
2. ______________
3. ______________
4. ______________
5. ______________
6. ______________
7. ______________
8. ______________
9. ______________
10. ______________

திருப்புக ☞

### விதிமுறைகள்

☞ இந்தப் பத்துக் கேள்விகளுக்கு விடை எழுதிக் கூப்பனைப் பூர்த்தி செய்து ஆங்கிலத்துறைப் பேராசிரியர் **திரு.எஸ்.ஞானஸ்கந்தன்** அவர்களிடமோ, இளந்தூதுப் பெட்டியிலோ சேர்க்கவும்.

☞ ஒன்றுக்கு மேற்பட்டோர் சரியான விடைகளை எழுதியிருந்தால் குலுக்கல் முறையில் மூவரைத் தேர்ந்தெடுத்துப் பரிசு வழங்கப்படும்.

☞ பத்துக் கேள்விகளுக்கும் சரியான பதில்கள் இல்லையெனினும் அதிகக் கேள்விகளுக்குச் சரியான விடை அளிப்பவர்களுக்கு வாய்ப்புத் தரப்படும்.

☞ விடைகள் வந்து சேர வேண்டிய கடைசி தேதி 30.9.2002

☞ ஆசிரியர் குழுவின் முடிவே இறுதியானது.

## ஒரு நாள் Life

| | |
|---|---|
| காலையில் | coffee |
| குளிக்க | Hamam |
| அட்வைஸ்க்கு | Daddy |
| ஆறுதலுக்கு | Mummy |
| சிரிப்புக்கு | Sister |
| முறைப்புக்கு | Brother |
| கலக்கலுக்கு | College |
| லொள்ளுக்கு | Bus |
| ஜாலிக்கு | Friends |
| அறிவுக்கு | Books |
| சிந்திக்க | Wills |
| ஸ்டைலுக்கு | Jeans |
| ரிலாக்ஸ்க்கு | Film |
| பொழுதுபோக்குக்கு | T.V. |
| அறுவைக்கு | Drama |
| தெளிவுக்கு | News |
| டான்ஸ்க்கு | Pop |
| முடிவில் | Sleep |
| தூக்கத்தில் | Dream |

ஏனடா இந்த Life

வாழ வேண்டும் நல்ல Life. . . .

ச.விஜய்
இளம் வணிகம் [illegible]







# தொடர்கதை . . .

"அப்பா! அப்பா!" என்று உறக்கக் கத்திக்கொண்டே வீட்டினுள் நுழைந்தான் ராமன். வேலை களைப்பில் சோர்வாய் அமர்ந்திருந்த ரங்கசாமி கம்மிய குரலில் "என்னப்பா?" என்றார். "அது வந்து... நாளைக்கு ஒரு புத்தகம் வாங்கணும் அதுக்கொரு ஐம்பது ரூபா, அப்புறம் காலேஜுக்கு ஒரு வாரத்தில் பீஸ் கட்டணும் அதுக்கொரு முந்நூறு ரூபாய், ஆக மொத்தம் நானூறு ரூபாய் கொடுப்பா" என்றான்.

"என்னப்பா! போன வாரம் தானே ஏதோ பீஸ் கட்டணும்னு பணம் வாங்கிட்டுப் போன. அதுக்குள்ள இப்ப வேற எங்கப்பா போறது இவ்வளவு பணத்துக்கு" என்று பெருமூச்சு விட்டார் ரங்கசாமி.

"அட என்னப்பா! புரியாம பேசுற. காலேஜுனாலே இப்படித்தான் அடிக்கடி பணம் கேப்பாங்க. அதுக்கெல்லாம் பயந்தா எப்படி படிக்கிறது" என்று ஒரேடியாக பழியெல்லாம் கல்லூரி மீது போட்டான் ராமன்.

ஏ.கமாலியேல்
இளம் ஆங்கிலம் [illegible]

# Royal Constructions

**ENGINEERS & CONTRACTORS**

I, II nd floor, Hama Centre, 142, Pattamangal St.,
Mayiladuthurai - 609 001.
☎ : 223614, Fax : 225849 Mobile : 098424 - 33225

H.O.: E5/234, 28 Arcot Road, Saligramam, Chennai - 600 013
☎ : 044 - 4804749

B.O : 10, Railway St.,
Ambagarathur,
Karaikal - 609 601.
☎ : 04368 - 52388



B.O.: 99/8, Australia complex,
South Main St.,
Thiruvarur - 610 002
Mobile 098424 - 44288

**BUILDING DESIGNERS MULTY - STOREYED**
**RCC STRUCTURELS**
**QUALITY CONSCIOUS, ASSURANCE**
**SPECIALIST IN INTERIORS, DESIGNERS**

## ராயல் கன்ஸ்ட்ரக்சன்ஸ்

141, ஹமா சென்டர், (2-வது தளம்)
பட்டமங்களத்தெரு, மயிலாடுதுறை - 609 001
Email : royalconstructions@rediffmail.com





☎ : 224954

# National Watch House

*Dealer:*

- hmt
- TITAN
- CITIZEN
- SONATA
- SAMAY



ORPAT® Scientific Fx100 Calculators

ORPAT® Telephones

**( HMT Authorised Service Centre )**

No. 10, Raj Building, Pattamangala Street,
Mayiladuthurai - 609 001.

மழைக்குக் கூட பள்ளிகூடப் பக்கம் ஒதுங்காத ராமசாமி அவன் சொல்வதுக்கெல்லாம் தலையாட்டி, அங்கும் இங்கும் கடனை வாங்கி பணத்தைக் கொடுத்தார்.

இந்தப் பணத்தை வைத்து கொண்டு தன் நண்பர்களுடன் ஒரு வாரம் ஜாலியாகச் சுற்றினான் ராமன்.

ஆம்! ராமசாமிக்கு ஒரு மகன் இரண்டு மகள்கள். தன் மகள்களைக் கூட மறந்து விட்ட நிலையில் உழைத்த உழைப்பினைத் தன் மகனுக்காகவே செலவிட்டார். அவன் படித்து நம்மையும் தன் இரு மகள்களையும் நல்ல நிலைக்கு கொண்டு செல்வான் என்ற நம்பிக்கையில். அதனாலேயே, மகள்கள் இருவரையும் உயர்நிலையோடு நிறுத்திவிட்டார்.

ஆனால், ராமன் மிகவும் மோசமான நிலைக்குச் சென்றான். நண்பர்களுடன் சேர்ந்து தீய பழக்கவழுங்களில் ஈடுபட்டான். இதை மிகவும் தாமதமாகத் தெரிந்து கொண்ட ராமசாமி, அவனைக் கண்டித்தார். ஆனால் அவனிடம் இருந்து எதிர்ப்புதான் கிளம்பியது. தன் தந்தையைத் திரும்பி அடிக்கும் அளவிற்கு வளர்ந்திருந்த ராமன் தாகுறைவாகப் பேசினான். ராமசாமியின் கனவுகள் சுக்கு நூறாய் உடைந்தன. மனம் நொந்துபோய் அழுதுவிட்டார்.

இப்போது தன் மகனை மறந்து விட்டு மகள்களை நினைத்து குடிக்க ஆரம்பித்தார். நாளடைவில் உடல் மெலிந்து படுத்த படுக்கையாகி விட்டார். ராமன், அவரை அரசு மருத்துவமனையில் சேர்த்திருந்தான். எவ்வளவோ முயற்சிகள் செய்தும் குணமாகவில்லை. முடிவில் தன் உயிர் இருக்கும்போதே மகனுக்குத் திருமணம் செய்து பார்க்க ஆசைப்பட்டார்.

அதன்படி ஏற்பாடுகள் நடந்துகொண்டிருக்க ராமன் தன் உறவினர்களுக்கு அழைப்பிதழ்களைக் கொடுத்துக் கொண்டிருந்தான். நாளை மறுநாள் திருமணம் என்றால் இன்று மதியமே ராமசாமியின் உயிர் பிரிந்தது.

சாவு ஏனோ! அவருக்காக காத்திருக்கவில்லை. மறுநாள் அவருடைய இறுதிச் சடங்குகள் நடந்து முடிந்தன. குழம்பிப்போயிருந்த குடும்பத்திற்கு ஊரே ஆறுதல் கூறியது. குடும்பச் சுமைகள் யாவும் ராமன் மீதே விழுந்தன.

"ஏற்பாடு செஞ்ச சுபகாரியத்தை நிறுத்த கூடாது. மூனாம் நாள் எண்ணெய்தேய்ச்சிட்டு மறுநாள் கல்யாணத்தை வச்சிகிடலாம்" ஊர்ப் பெரியவர் தீர்க்கமாய்க் கூறினார்.





அனைவரும் சம்மதித்தனர் திருமணமும் இனிதே நடந்தேறியது சில நாட்களுக்குப் பிறகு ராமன் தன் குடும்பத்துடன் வெளியூர் சென்றான். அப்போது தான் தெரிந்தது தன் அப்பாவின் மருத்துவச் செலவிற்கும், தன் திருமணச் செலவிற்கும் இருந்த ஒரே வீட்டையும் விற்றுவிட்டான் என்பது.

பல வருடங்கள் தன் கணவருடன் வாழ்ந்த ஊரைவிட்டுப் பிரிய மனமில்லாமல் கண்ணில் நீர் ததும்ப ராமனுடன் சென்றாள் அவனது தாய். பொறுப்பில்லாத மாணவனாக இருந்த ராமன் அப்பாவின் இறப்பிற்குப் பிறகு பொறுப்புள்ள அண்ணனாகத் தன் இரு தங்கைகளுக்கும் நல்ல இடத்தில் திருமணம் செய்து கொடுத்தான்.

தன் அப்பாவின் நிலைக்கு வந்த ராமனுக்கும் இரு மகள்களும், ஒரே மகனும். நாட்கள் வெகு விரைவாக ஓடியது. ராமனின் மகனும் கல்லூரி செல்லும் அளவிற்கு வளர்ந்திருந்தான்.

ஒரு நாள் அப்பா! அப்பா! என்று கத்தியபடியே வீட்டினுள் நுழைந்தான் ராமனின் மகன். வேலைக் களைப்பில் சோர்ந்துபோயிருந்த ராமன் "என்னப்பா" என்றான் "அது வந்து நாளைக்கு ஒரு புத்தகம் வாங்கணும், அதுக்கொரு ஐம்பது ரூபாய், அப்புறம் காலேஜுக்கு இன்னும் ஒரு வாரத்தில் பீஸ் கட்டணும் அதுக்கொரு மூண்ணூறு ரூபாய், ஆக மொத்தம் நானூாறு ரூபாய் கொடுப்பா" என்றான்.

திடுக்கிட்ட ராமனின் கண் முன் கடந்த கால சூழல் ஓடியது. •

**விடைகள் :**

1. நாய்
2. காபி ஆவி
3. சுவிட் பாக்ஸ்
4. டம்ளர்
5. கை கடிகாரம்
6. Only

*இளைஞனே!*

*சேமித்த சில்லரையில்*
*புத்தகம் வாங்கு*
*புத்தி வளரும்!*
*சிகரெட் வாங்கினால்*
*புற்று தான் வளரும்!*

ச.தேன்மொழி
இளம் நுண்ணுயிரியல் (இ.ஆ.)

இவை அத்தனையும் நமக்காக. நம் மேம்பாட்டிற்கு மட்டுமே. சரி இவர்கள் இங்கே என்ன தான் செய்கிறார்கள் . . . . நமது குழு அணுகியது ஆணையரை.

அவர் கூறியதாவது, "நகர மக்களின் அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்வதே எங்களின் முக்கியக் குறிக்கோள். அவ்வடிப்படையில் பார்த்தால்.

குடிநீர் வழங்குதல், தெருவிளங்குகள் பராமரித்தல், சாலைகள், பாலங்கள் மற்றும் கட்டடம் அமைத்தல், கல்வி மேம்படுத்துதல், பொது சுகாதாரம், தீயணைப்பு, உணவுக் கலப்படம், காய்கறி மற்றும் மீன் சந்தைகள், பேருந்து நிலையம் அதன் போக்குவரத்து வசதிகள், வணிக வளாகங்கள், பயணிகள் தங்குமிடம், வாடகைக் கார் நிறுத்துமிடம், தொழிற்சாலைகள், பூங்காக்கள், வாசக சாலைகள் இவைபோல் எத்தனை, எத்தனையோ நகராட்சியின் கண்காணிப்பில் உள்ளன".

இவற்றுள் சிலவற்றைப் பற்றி அவர் விரிவாக சொன்னதில். இந்நகராட்சியில் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கும் திட்டம் ரூ. 20.62 லட்சம் செலவில் பொதுசுகாதாரத் துறையினரால் 14.1.1969-இல் கட்டி முடிக்கப்பட்டு நகராட்சியினர் வசம் ஒப்படைக்கப்பட்டது. இத்திட்டத்தின் கீழ் குடிநீர் விநியோகம் செய்ய மாமரத்து மேடை சாலையில் குடிநீர் தேக்கத்தொட்டிகள் இரண்டு அமைப்பட்டுள்ளன. அதன் கொள்ளளவு ஒவ்வொன்றும் 3.75 லட்சம் லிட்டராகும்.

சித்தர்காட்டில் இந்நகராட்சியின் குடிநீர் ஏற்றும் நிலையம் அமைந்துள்ளது. இதன் மூலம் நாளொன்றிற்கு 27 லட்சம் லிட்டர் குடிநீர் சேகரிக்கப்படுகிறது. மேலும் காந்தி நகரில் அமைந்துள்ள ஆழ்துளைக் கிணறு மூலம் நாள் ஒன்றிற்கு 6 லட்சம் நீரும் சேகரிக்கப்பட்டு நேரடியாக விநியோகம் செய்யப்படுகிறது. நகராட்சியால் நாள் ஒன்றிற்கு மொத்தம் 41.82 லிட்டர் பாதுகாக்கப்பட்டு ஒரு நபருக்கு 55 லிட்டர் வீதம் குடிநீர் வழங்கப்படுகிறது.

இந்நகரின் கிழக்குப் பகுதியிலுள்ள திருவிழந்தூர் மேட்டுப் பகுதியானதால், அப்பகுதியில் வாழும் மக்களுக்குத் தினசரி நகரின் இதரப் பகுதிகளுக்கு வழங்கப்படுவது போல் நீர் வழங்க முடியவில்லை





என்பதைக் கருத்தில் கொண்டு ஓர் நிரந்தர தீர்வு காணும் பொருட்டு ரூபாய் 10 லட்சம் மதிப்பீட்டில் குடிநீர் வழங்கும் திட்டம் காந்தி நகர் மற்றும் மாமரத்துமேடை இரண்டு பகுதியிலும் தயாரித்துச் செயல்படுத்தும் நிலையிலுள்ளது. குடிநீர் விநியோகப் பராமரிப்புப் பணிகள், குடிநீர் திட்டப் பணியாளர்களுக்கான ஊதியம், அகவிலைப்படி, இடைக்கால நிவாரணத் தொகை ஆகிய பணிகளுக்கு மொத்தம் ரூபாய் 30.04.377 செலவிடப்பட்டுள்ளது

மயிலாடுதுறை நகரில் மொத்தம் சாலைகளின் நீளம் 87.547 கி.மீட்டராகும் நகராட்சியின் எல்லையிலுள்ள சாலைகளில் சில கிலோமீட்டர் சாலைகள் நெடுஞ்சாலைத் துறையினரால் பராமரிக்கப்பட்டு வருகின்றன. 2001 ஆம் ஆண்டின் கணக்கின்படி நகராட்சிக் கட்டுப்பாட்டிலுள்ள சிமெண்ட் சாலைகள் 6.088. தார் சாலைகள் 74,384. கருங்கல். ஜல்லி மற்றும் சாதாரண கப்பி சாலைகள் 4,707. மணல் சாலைகள் [illegible] மழைநீர் வடிகால் 18.510. இதுமட்டுமன்றிச் சிறப்பு சாலைகளுக்கென ரூபாய் 60 லட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுக், [illegible]ள்ளது

[illegible] முதல் நகராட்சியால் நிர்வகிக்கப்பட்டு வந்த இரண்டு மேல்நிலைப்பள்ளிகளும். 16 தொடக்கப் பள்ளிகளும் அலுவலகத்துறை வசம் ஒப்படைக்கப்பட்டது. நகராட்சி பராமரித்து வந்த 16 தொடக்கப் பள்ளிகளில், சொந்தமான கட்டடத்தில் 12 பள்ளிகளும், வாடகைக் கட்டடத்தில் 4 பள்ளிகளும் இயங்கி வருகின்றன. இதில் ஔவையார் நகரின் தொடக்கப்பள்ளியில் போதுமான மாணவர்கள் வருகை இல்லாத காரணத்தினால் அப்பள்ளி மூடப்பட்டது. மேலும், 1.4.90-இல் இருந்து ஆசிரியர் மற்றும் ஆசிரியைகள் அல்லாத பணியிடங்களுக்கு அரசின் நிதியிலிருந்து ஊதியம் வழங்கப்பட்டு வருகிறது.

இந்நகரில் நகராட்சியால் பராமரிக்கப்பட்டு அரசு இடத்தில் ஒப்படைக்கப்பட்ட பள்ளிகளைச் சேர்த்து 2001-ஆம் ஆண்டின் கணக்குப்படி, 5 மேல்நிலைப்பள்ளிகள், 1 உயர்நிலைப்பள்ளி, 20 தொடக்கப்பள்ளி, 3 நடுநிலைப்பள்ளிகள் இயங்கி வருகிறது. இதேபோல் இந்நகரில் அரசுக்கல்லூரி ஒன்றும், தனியார் கல்லூரி ஒன்றும் இயங்கி வருகிறது.

இதுபோல் ஒவ்வொரு நகரத்திலும், மக்களின் மேம்பாட்டிற்காக நகராட்சி என்ற அமைப்பில் நிர்வாகிகள் செயல்பட்டு வருகிறார்கள்

**சிறப்புப்பார்வை நிறைம்...**

# M.M.FASHION A/C

## BEST READYMADE'S SANGAMAM

92F, MAHADANA STREET
MAYILADUTHURAI.

Scorpion ™

WE SUPPLY DRESSES OF

High Quality and Correct Fittings






# பயணிகள் கவனத்திற்கு . . . .

| வ.எண் | வரும் நேரம் | புறப்படும் நேரம் | புறப்படுமிடம் | சேருமிடம் |
|---|---|---|---|---|
| | | விழுப்புரம் மார்க்கம் | | |
| 818 | - | 05.20 | மயிலாடுதுறை | விழுப்புரம் |
| 820 | 05.20 | 05.30 | தஞ்சாவூர் | விழுப்புரம் |
| 828 | 03.50 | - | தஞ்சாவூர் | மயிலாடுதுறை |
| 824 | 10.15 | 10.25 | திருச்சி | செங்கல்பட்டு |
| 6854 | 10.55 | 11.00 | திருச்சி | தாம்பரம் |
| 816 | - | 15.33 | மயிலாடுதுறை | விழுப்புரம் |
| 814 | 19.20 | 19.30 | தஞ்சாவூர் | தாம்பரம் |
| 822 | - | 17.25 | மயிலாடுதுறை | விழுப்புரம் |
| | | | - | - |
| 812 | 21.15 | 21.25 | திருச்சி | தாம்பரம் |
| 6702 | 22.05 | 22.15 | இராமேஸ்வரம் | தாம்பரம் |
| 6876 | 23.35 | 23.45 | காரைக்குடி | தாம்பரம் |
| 6714 | 00.10 | 00.15 | இராமேஸ்வரம் | தாம்பரம் |
| | | காரைக்குடியில் இருந்து வரும் வண்டிகள் | | |
| 866 | 09.35 | - | திருத்துறைப்பூண்டி | மயிலாடுதுறை |
| 864 | 12.00 | - | காரைக்குடி | மயிலாடுதுறை |
| 862 | 20.25 | - | காரைக்குடி | மயிலாடுதுறை |
| 6876 | 23.35 | 23.45 | காரைக்குடி, நாகூர் | தாம்பரம் |
| | | திருச்சி மார்க்கம் | | |
| 6701 | 03.20 | 03.25 | தாம்பரம் | இராமேஸ்வரம் |
| 811 | 04.45 | 05.00 | தாம்பரம் | திருச்சி |
| 813 | 06.15 | 06.25 | தாம்பரம் | தஞ்சாவூர் |
| 823 | - | 08.05 | மயிலாடுதுறை | திருச்சி |
| 815 | 09.00 | - | விழுப்புரம் | மயிலாடுதுறை |
| 825 | - | 09.30 | மயிலாடுதுறை | தஞ்சாவூர் |
| 6853 | 15.10 | 15.15 | தாம்பரம் | திருச்சி |
| 827 | - | 16.15 | மயிலாடுதுறை | திருச்சி |
| 819 | 18.00 | 18.15 | விழுப்புரம் | தஞ்சாவூர் |
| 6713 | 19.30 | 19.35 | தாம்பரம் | இராமேஸ்வரம் |
| 821 | 22.10 | - | விழுப்புரம் | மயிலாடுதுறை |
| | | காரைக்குடியில் இருந்து வரும் வண்டிகள் | | |
| 6875 | 02.20 | 02.30 | தாம்பரம் | காரைக்குடி |
| 861 | - | 06.40 | மயிலாடுதுறை | காரைக்குடி |
| 863 | - | 16.40 | மயிலாடுதுறை | காரைக்குடி |
| 865 | - | 18.30 | மயிலாடுதுறை | திருத்துறைப்பூண்டி |

நம் கல்லூரி 2002-03 கல்வியாண்டில் புதிதாய் பொறுப்பேற்றுள்ள மாணவப்பேரவை பொறுப்பாளர்களுக்கு இளந்தூதுவின் வாழ்த்துக்கள்


இந்திய நாளிதழ்களில் மாணவர்கள் நடத்தும் முதன்மையான நாளிதழ்

இளந்தூது

அறிந்து பரப்பி ஆக்கம் செய்குவோம்

ஏ.வி.சி கல்லூரி,மன்னம்பந்தல் மயிலாடுதுறை

(400 காசுகள்)

இளந்தூது செப்டம்பர் இதழ் தற்போது விற்பனையில் வாங்கிவிட்டீர்களா?


# வியத்தகு வெற்றி

ஜூலை 13, லாட்ஸ் தைானத்தில் இந்தியாவும், இங்கிலாந்தும், இந்திய மண்ணில் பிறந்த ஒவ்வொருவருக்கும் மறக்க முடியாத நாளாக அது திகழும் என்று அப்பொழுது யாரும் நினைக்கவில்லை. தொடர்ச்சியாக ஒன்பது பைனல்களில் தோற்றுத் "தோல்வியின் வலியைக்" கொஞ்சம் அதிகமாகவே அறிந்திருந்த நமக்கு, இங்கிலாந்திற்கு எதிரான இந்தப் போட்டியில் வென்றாவது "பைனலுக்கும் இந்தியாவிற்கும் ராசியில்லை என்ற அவப்பெயரை நீக்குமா என்ற ஏக்கம் மட்டுமே குடிகொண்டிருந்தது. முதலில் களமிறங்கிய இங்கிலாந்து அணி மலைபோல 325 ரன்களைக் குவித்போது இருந்த அந்த நம்பிக்கையும் பறிபோனது. சரி என்னதான் நடக்கிறது நம்ம டெண்டுல்கர் இருக்கிறாரே

என்று பார்க்கத் தொடங்கிய அனைவருக்கும் அதிர்ச்சி. முன்னணி பேட்ஸ்மேன்கள் அனைவரும் சொற்ப ரன்களில் அவுட்டாயினர். டெண்டுல்கரே சற்று நம்பிக்கையிழந்து அவுட்டாகியது போல் தான் இருந்தது. 146 ரன்களுக்கு ஐந்து விக்கெட்டுகளை இழந்து இந்தியா தவித்துக் கொண்டிருந்தது.

**"INDIA WAS DOWN IN TO THE DUMPS"** என்று கமெண்ட் அடிக்கப்பட்டது. இக்கட்டான இந்தச் சமயத்தில் களமிறங்கிய இந்திய அணியின் இளம் வீரர்களான யுவராஜ்சிங், முகமது கைப் சேர்ந்து இந்திய அணியைச் சரிவிலிருந்து மீட்டனர். மலைபோன்ற 325 இலக்கு அவர்களுக்கு மடுவானது. இருவரின் கடின உழைப்பினால் இந்திய அணி வெற்றி பெற்றது. லார்ட்ஸ் மைதானத்தில் இவ்வளவு ரன்களைச் சேஸ் செய்து வெற்றி பெற்ற முதல் அணி இந்திய அணி. இது பலகாலங்களுக்கு முறியடிக்கப்படாத சாதனையாகத் திகழும் என்பதில் சந்தேகமில்லை. டெண்டுல்கரிடம் எதிர்பார்த்த இந்த வெற்றியை இவர்களிடம் எதிர்பார்க்கவில்லை.

அவர்களை இவ்வாறு விளையாடத் தூண்டியது எது? என்று சிந்திக்கும் பொழுது அவர்களிடம் இருந்த **"SPIRIT"** தான் காரணம். அது **NEVER SAY DIE SPIRIT** இந்த **SPIRIT** அனைவரிடமும் இருக்க வேண்டும். முக்கியமாக இளைஞர்களிடம் இருக்க வேண்டும். இவர்களால் இதைச் செய்ய முடியாது என்று அனைவரும் நினைக்கும் பொழுது அதை முடித்துக் காட்ட வேண்டும். இந்த தி(ரி)ல் வெற்றிக்குப் பின்னால் இந்த இளைஞர்களிடம் இருந்த தில்லே காரணம் என்பதை மறுக்கவே முடியாது. இளைஞர்கள் **"காத்திருக்கும் வரை காற்று, புறப்பட்டதும் புயல்"** என்பதை இன்னுமொருமுறை நிரூபித்துக்கிறார்கள்.

ரா.ஸ்ரீராம்
இளம் வேதியல் (நிலை)

நம் கல்லூரிச் சேவை சங்கங்கள் மற்றும் நுண்தலைமன்றத்தில் புதிதாகப் பொறுப்பேற்றுருக்கும் மாணவர்கள் அனைவருர்கும் இளந்தூதுவின் வாழ்த்துக்கள்.



## அழகுக்கு அழகூட்ட

## அப்சரா மகளிர் அழகு நிலையம் A/C

152, மகாதானத் தெரு,
(ICICI Bank எதிர்ப்புறம்)
மயிலாடுதுறை.

☎: Clinic : 228952, Resi : 242770

வெற்றிகரமான ஒன்பதாம் ஆண்டு சேவையில்
அடியெடுத்து வைக்கும் உங்கள் அப்சரா
இப்பொழுது ஏர்கண்டிஷண்ட்
வசதியுடன் . . .






## வரதட்சணை

மனைவி என்ற
பட்டத்தை வாங்க
மங்கையர் கொடுக்கும்
வஞ்சம் . .!

மு.மகேந்திரன்
இளம் வரலாறு (இடை)

## உயர்ந்து நில்

உனது நம்பிக்கைத் தூண்கள்
நிலைத்து நிற்கும்வரை - நீ
உனது இலட்சியத்தின்
இலக்குகளை விட
உயர்ந்து நிற்பாய்!

இரா.வில்லன் ராஜா
இளம் பொருளியல் (நிறை)

## எல்லையற்றது



கடலுக்கு எல்லை
கரை வரைதான்!
நிலவுக்கு எல்லை
இருள் வரைதான்!
பூமிக்கு எல்லை
உலகம் உள்ளவரைதான்!
ஆனால்
நம் நட்புக்கோ
எல்லை என்பதே இல்லை

ஆர்.ரவீந்தர்
இளம் வணிகம் (நிறை)

## எண்களின் வினோதம்

4 x 4 = 16
44 x 4 = 176
444 x 4 = 1776
4444 x 4 = 17776
44444 x 4 = 177776

6 x 6 = 36
66 x 6 = 396
666 x 6 = 3996
6666 x 6 = 39996
66666 x 6 = 399996

கிருத்திகா
இளம் வேதியல் (முதல்)

## சிரி . . . சிரி . . . சிரி . . .

தனக்குள் சிரிப்பவன் - ஞானி
தனக்குத்தானே சிரிப்பவன் - பைத்தியம்
தன்னை மறந்து சிரிப்பவன் - ரசிகன்
தன்னை நினைத்து சிரிப்பவன் - காதலன்
பிறரைப் பார்த்து சிரிப்பவன் - கர்வன்
பிறருக்காகச் சிரிப்பவன் - கோமாளி
சிரித்துக் கொண்டே ஜெயிப்பவன் - மதியூகி
ஜெயித்தாலும் சிரிக்காதவன் - கர்ம யோகி

ஏ.ஆர்.குருநாதன்
இளம் வேதியல் (முதல்)





## வீழ்ச்சியல்ல

விழுந்தாலும் எழுவதற்கு
சிலந்தியிடம் படி . . .
மகிழ்ச்சி போனாலும் துளிர்ப்பதற்கு
மரங்களிடம் படி . . .
உற்சாகம் தேய்ந்தாலும் மீட்சி பெற
நிலவிடம் படி . . .
வீழ்ந்தாலும் புத்துயிர் பெற
விதைகளிடம் படி . . .
தோற்றாலும் வெற்றி பெற
தோல்வியிடமே பாடம் படி . . . .

ம.அமரவேல்
இளம் விலங்கியல் (முதல்)

## முகங்கள்

அப்பா என்னை உதவாக்கரை என்றார்!
ஆசிரியர் என்னை மண்டு என்றார்!
நண்பர்கள் என்னைத் துரோகி என்றனர்!
பக்கத்து வீட்டார் என்னைப்
பச்சோந்தி என்றார்! - ஆனால்,
நாடு என்னை "அரசியல்வாதி" என்கிறதே!.

எஸ்.மோகன்
இளம் கணினி (முதல்)



ஓவியம்: க.சுந்தரவரதன்





# அமைதிப் புறா

எளியோர்க்கு எளிமையாய்!
ஏழைகளுக்கு இறங்குபவளாய்!
உலகம் முழுதும்
அமைதியைப் பரவச் செய்த
அன்புப் புறாவே!
உலக அமைதியே! - நீ
முகத்தைக் கையால் மூடி
மறைப்பதன் காரணம் யாதோ?
உலக நாடுகள் ஒன்றுக்கொன்று
விரோதப் பார்வை பார்த்துக்
கொண்டிருக்கிறதே - அது
பிடிக்காமலா? இல்லை
உலகம் முழுவதும் தீவிரவாத
அமைப்புகள் வெறியாட்டம்
ஆடுவதைக் காண
சகிக்காமலா? இல்லை
அரும்பாடுபட்டுப் பரப்பிய
அமைதி அழிந்து விடுமோ
என்ற பயத்தினாலா?
சொல் தாயே ! சொல் !!

தே.கணேஷ்பிரபு
இளம் வணிகம் (இடை)


**சாந்தி மோட்டார்**
**டிரைவிங் ஸ்கூல்**

எண் 5, OSM நகர்,
(விஜயா தியேட்டர் எதிர்புறம்)
மயிலாடுதுறை. ☎: 225728



சிறந்த முறையில் ஓட்டுநர் பயிற்சி அளித்து உரிமம் எடுத்துத் தரப்படும்.

**சாந்தி ஆட்டோ**
**கன்சல்டன்ஸி**

கார், ஆட்டோ, பஸ், டிராக்டர், லாரி இரு சக்கர வாகனங்கள் வாங்கவும் விற்பவும் மற்றும் வீடு, மனைகள் வாங்கவும், விற்கவும், வாடகை வீடு அமைத்துக் கொடுக்க அணுகவும்.

**A.M. கண்ணன்**

எண் 5, OSM நகர்,
(விஜயா தியேட்டர் எதிர்புறம்)
மயிலாடுதுறை. ☎: 225728

- டிஜிட்டல் கலர் பாஸ்போர்ட் போட்டோ எடுத்த உடனே கிடைக்கும்.
- மிகப்பழைய அரித்துப்போன முக்கியமான போட்டோவைக்--- கொண்டு வாருங்கள், அதை டிஜிட்டல் முறையில் புத்தம் புது கலர் போட்டோவாக மாற்றித் தருகிறோம்.
- தங்களின் போட்டோவைக் கொண்டு வாருங்கள் அதை டிஜிட்டல் பேக்கிரவுண்டாக மாற்றித் தங்களுக்குப் பிடித்தமாதிரி செய்து தருகிறோம்.
- கரண்ட் இல்லையென்றாலும் ஜெனரேட்டர் மூலம் பாஸ்போர்ட் போட்டோ உடன் எடுத்துத் தரப்படும்.

**தங்கள் நினைவுகளை எங்கள் புகைப்படம் மூலம் எல்லோருடனும் பகிர்ந்து கொள்ளுங்கள்.**

# ராஜ் ஸ்டுடியோஸ்

**16, ராஜ் பில்டிங் மாடியில், பட்டமங்கலத் தெரு,**
**மயிலாடுதுறை - 609 001**
**☎: 225585**

**RAAJ STUDIOS**
***MAYILADUTHURAI***

ஒரு நிமிடத்தில் பாஸ்போர்ட் போட்டோ கிடைக்கும்




# துணுக் மழையில் நனையலாம் வாங்க . . .

☎: 222960

மக்களின் சேவையில் இந்த அமைப்போடு ...

ஸ்ரீ ராமன்ஸ்
காபி மார்ட்

45A–பெரியகடைத் தெரு
மயிலாடுதுறை–609001

We among
House of Qualitygoods

☎: 241517

அனைத்து ரக ஜவுளிகளுக்கு

ஸ்ரீ ஸத்குரு சில்க்ஸ்

மர்ஹபா காம்ப்ளக்ஸ்,
பெரியகடை வீதி, மயிலாடுதுறை.

இரத்தது செப்: 2002/10

# நான்காவது தூண்

எல்லோருக்கும் பத்திரிகைகளை ஜனநாயகத்தின் நான்காவது தூண் என்பது மட்டும் நன்றாகத் தெரியும். மற்ற மூன்று தூண்கள் என்னென்ன? பத்திரிகையை நான்காவது தூண் என யார் சொன்னது?

1828இல் 'அரசியல் நிர்ணய வரலாறு'(Constitutional History)பற்றி ஒரு கட்டுரை எழுதிய புகழ்பெற்ற வரலாற்று ஆசிரியர் மெக்காலே முதன் முதலில் பத்திரிகையாளர்களை "அரசின் நான்காம் தூண்" (fourth estate) என்று வர்ணித்தார். அதற்கு விளக்கமளிப்பது போல, எட்மன்ட் பர்ன் தனது அரசவையில், "நாடாளுமன்றத்தில் அரசகுடும்பம்(royalty) பிரபுக்கள் சபை (house of lords) பொதுமக்கள் சபை (house of commons) ஆகிய மூன்று தூண்கள் உள்ளன. ஆனால் அங்கே செய்தியாளர்கள் (reporters) அமருமிடத்தில் எல்லாவற்றிலும் முக்கியமான நான்காவது தூண் உள்ளது எனக் குறிப்பிட்டார்.

ஆக அப்போதிலிருந்தே பத்திரிகைகள் முக்கிய ஒன்றாகக் கருதப்பட்டு வரப்பட்டுள்ளன.

நமது நாட்டிலும் நாடாளுமன்றம் (Parliament) நிர்வாகத்துறை (Executive) நீதித்துறை (judiciary) ஆகிய அரசின் மூன்றுதுறைகளோடு பத்திரிகையை (press) நான்காவது தூணாகக் கருதலாம்.

☛ தொகுப்பு

"இதழியல் கலை"என்ற நூலிலிருந்து
எம்.எஸ்.எம். செந்தில்குமார்
களினிட்டயன்பாட்டியல் (திரை)

# புகைப்பதை நிறுத்தினால் . . .

புகைப்பிடிக்கும் பழக்கம் உள்ள ஒருவர், புகைப்பதை நிறுத்தினால் . . .

- ✓ 20 நிமிடங்களுக்குள்ளேயே உயர் குருதி அழுத்தம், உடல் வெப்பம், நாடித் துடிப்பு இவையெல்லாம் சரியான நிலைக்குவரும்.
- ✓ 8 மணிக்குள்ளே குருதியிலே உள்ள கார்பன் மோனாக்ஸைடு அளவு குறையும், ஆக்ஸிஜன் அளவு கூடும்.
- ✓ 24 மணி நேரத்துக்குள்ளே மாரடைப்பு ஏற்படுவதற்கான வாய்ப்பு குறையுது.
- ✓ 48 மணி நேரத்துக்குள்ளே உணர்வு நரம்புகளின் முனைப் பகுதிகள் மறுபடியும் ஒன்று சேர்கின்றன. இதனால் நாவில் சுவை உணர்வு மூக்கின் நுகரும் சக்தி இதெல்லாம் மேம்படும்.
- ✓ 3 நாட்களுக்குள்ளே மூச்சு விடுதல் சுலபமாகும்.
- ✓ 2 அல்லது ௩ மாதத்திற்குள் குருதி ஓட்டம் மேம்படும். நடப்பது சுலபமாகும். நுரையீரல் கொள்ளளவு 30% அதிகரிக்கும்.
- ✓ 9 மாதத்திற்குள் சுவாசக் குறைபாடுகள் நீங்கும். (sinus congestion and shortness of breath decreasses) நுரையீரலில் உள்ள அசுத்தம் வடிகட்டும் திசுக்கள் சரியாக வேலை செய்ய ஆரம்பிக்கும்.
- ✓ 1 ஆண்டுக்குள் இதய அழுத்த நோய்களுக்கான வாய்ப்பு பாதியாகக் குறையும்.
- ✓ 5 ஆண்டுக்குள் 1 நாளைக்கு ஒரு பாக்கெட் சிகரெட் புகைப்பவர்கள் நுரையீரல் புற்று நோயினால் சாகிறவர்கள் எண்ணிக்கை பாதியாகக் குறையும். புற்று நோய் செல்கள் சீரமைக்கப்படும்.

ஒருத்தர் தன் கடைசி சிகரெட்டைத் தூக்கியெறிஞ்சிட்டா அதன் பிறகு இத்தனை நன்மைகளும், மாற்றங்களும் ஏற்படுவதாக "American Cancer Society" அறிவித்துள்ளது.

ஆதாரம் - **"இன்று ஒரு தகவல்"** பாகம் - 23

☛ தொகுப்பு :

க.சுந்தரவரதன்
இளம் இயற்பியல் (இடை)





*உலகின் தலைசிறந்த பத்துப் பள்ளிகளைக் கொண்ட நாடுகளை ஐ.நா. கலாசாரக் கழகம் (UNESCO) தேர்வு செய்துள்ளது. அதன் கணிப்புப்படி பல்வேறு கல்விப் பிரிவுகளும் அதன் சிறப்புபெற்ற நாடுகளும் இதோ . . . . .*

| | | |
|---|---|---|
| பிழையின்றிப் படித்தல் | - | நியூசிலாந்து |
| குழந்தைப் பருவத்தில் கல்வி ஈடுபாடு | - | இத்தாலி |
| கணிதக் கல்வி | - | நெதர்லாந்து |
| விஞ்ஞானக் கல்வி | - | ஜப்பான் |
| பன்மொழிகளிலும் கல்வி அறிவு | - | நெதர்லாந்து |
| கலைசம்பந்தப்பட்ட சக்திகள் | - | அமெரிக்க நாடுகள் |
| உயர்நிலைப் பள்ளிகளில் கல்வித்தரம் | - | ஜெர்மனி |
| ஆசிரியர் பயிற்சி | - | ஜெர்மனி |
| மேல்நிலைக் கல்வி | - | அமெரிக்கா |
| முதியோர் கல்வி | | ஸ்வீடன் |

☛ தொகுப்பு

ப.தேன்மொழி
இளம் வணிகம் (நிறை)

## தெரியுமா உங்களுக்கு?

காஷ்மீரிலிருந்து ஒரே ஒரு பத்திரிகை மட்டும் தான் வெளிவருகிறது.
ஞானபீட விருதுபெற்ற ஒரே தமிழ்நாவல் சித்திரப்பாவை எழுதியவர் அகிலன்.
உலகின் அரசாங்க வரியே இல்லாத நாடு குவைத்.
தமிழ்நாட்டில் தலைசிறந்த விவசாய விஞ்ஞானி டாக்டர். எம்.எஸ்.
நியூயார்க்கில் உள்ள சுதந்திரச்சிலையின் உயரம் 161 அடிகள். இதுதான் உலகின் மிகபெரிய சிலையாகும்.
கின்னஸ் புத்தகத்தில் வெளிவரும் இரண்டு இந்திய மொழிகள் ஹிந்தி மற்றும் மலையாளம்.

☛ தொகுப்பு :

ஆர்.லெட்சுமி
இளம் மின்னணுவியல் (இடை)

## இனி வரும் காலம் யார் கையில்?

என்ற கோடீஸ்வரக் கேள்விக்கு அது 'கணினிக் கல்வி கற்றவருக்கே 'என்று முத்திரையைப் பயன்படுத்தாமல் சட்டென்று க்ளிக் செய்து பதில் சொல்லலாம். கணினிக் கல்வி என்பது நமது சமூகத்திலுள்ள அனைத்துத் தளங்களிலும் வியாபித்திருக்கும் மக்களுக்குத் தரப்பட்டுவிட்டதா? இல்லை தானே! இன்னமும் கிராமப்புற இளைஞர்களுக்கும் - நகரத்தில பெரும்பான்மையினருக்கும் - கம்ப்யூட்டர் கல்வி ஒரு கனவுமத்தாப்பூவாகத் தானே தோன்றுகிறது.

மூடிய கண்ணாடிக் கதவுக்குள் ஓசையின்றி - மெல்லிய வெளிச்த்தில் நுனிநாக்கு ஆங்கிலத்தில கற்றுத் தரப்படும் கணினிக் கல்வியின் விலை சற்று அதிகம் என்பது அனைவரும் அறிந்தது.

இந்தத் தடையை சுக்குநூறாக உடைத்து அனைவருக்கும் கணினிக் கல்வியைச் சென்று சேர்க்க வேண்டும் என்ற உன்னத லட்சியத்தின் - மயிலாடுதுறை முனிசிபல் ஹைஸ்கூல் எதிரில், கமால்மேன்சன் இரண்டாம் மாடியில் **C INFOTECH** கம்ப்யூட்டர் பயிலகத்தில் தொடங்கப்பட்டதுதான் **(TCPS)** எனும் தமிழ்நாடு கம்ப்யூட்டர் கல்வி மேம்பாட்டுத் திட்டம். இது **(NLPC)**என்ற தன்னார்வத் தொண்டு நிறுவனத்தின் அமைப்பாகும்.

இங்கு அடிப்படை கல்வி முதல் ஈ-காமர்ஸ் வரை நடத்தப்படுகின்றன. அத்தனையும் கட்டணமின்றி இலவசமாகக் கற்றுத்தரப்படுவது தான் நம்மை அதிர்ச்சியில் உறைய வைக்கும் உண்மைச் செய்தி. இப்பயிற்சியில் சேரும் மாணவர்களுக்கு **"விண்ணப்பக் கட்டணம் இல்லை, கோர்ஸ் பீஸ் இல்லை, சான்றிதழ்க் கட்டணம் இல்லை".** இப்படிப் பல 'இல்லைகள்'. ஆனால் கற்றுத்தரும் கல்வியின் தரமோ மயிலாடுதுறையின் சக நிறுவனங்களுக்குச் சற்றும் குறையவில்லை என்பது நிஜத்திலும் நிஜம். இச்சான்றிதழ்கள் அரசாங்கத்தின் வேலைவாய்ப்பு அலுவலகத்தின் பதிவு பெறும் மதிப்பு வாய்ந்தவை என்பது ஒரு எக்ஸ்ட்ரா வியப்பு.

வருடம் 2 தேர்வுகள் - மாநிலத் தேர்வுகள்-கூட்டுக் குடும்பம் போல் தோன்றி. பயிற்சி அளிக்கும் தமிழக அளவில் 235 நிறுவனங்கள் - நண்பர்களாக 20,100 மாணவர்கள் - இணக்கமான பணிகள் சிறந்த பயிற்சியாளர்கள்.

நீங்கள் மேற்கண்ட வார்த்தைகளின் உண்மைகளைக் கண்டறிய

## C INFOTECH

140, Pattamangala Street, Opp : Municipal High School,
II nd Floor, Kamal Mansion, Mayiladuthurai. ☎: 242066

**Course Offered : PGDCA, HDCA, DIT, DOA, COA, DTP, DAJP**

*We think better*





## "உண்டு என்பதே இங்கில்லை"

- மலைப்பாம்புக்கு விஷம் இல்லை
- மீன்களுக்கு கண் இமைகள் இல்லை
- பாம்பின் கண்களில் இமை இல்லை
- ஈக்களுக்குப் பற்கள் இல்லை
- யமுனை நதி கடலில் கலப்பதில்லை
- பாலில் இரும்புச் சத்து மட்டும் இல்லை
- வண்ணத்துப் பூச்சிக்கு வாய் இல்லை
- சாணப் புழுவிற்குத் தாய் இல்லை
- முதலைக்கு நாக்கு இல்லை
- பாம்பிற்குச் செவி இல்லை
- வவ்வாலுக்குப் பார்வை இல்லை
- ஈசலுக்கு வாய் இல்லை
- தவளைக்குக் கழுத்து இல்லை
- நண்டுக்குத் தலை இல்லை
- கோலாகரடி நீர் அருந்துவதில்லை
- கண்டெலிக்கு வியர்ப்பதில்லை
- யானையின் துதிக்கையில் எலும்புகள் இல்லை
- சந்திரனில் வாயு மண்டலம் இல்லை
- அல்பேனியா நாட்டில் மதங்கள் இல்லை
- ஆப்கானிஸ்தான் நாட்டில் ரயில்கள் இல்லை
- ஆப்பிரிக்காவில் புலிகள் இல்லை
- சவுதிஅரேபியா நாட்டில் நதிகள் இல்லை

தொகுப்பு :

ஜெ.சுகந்தி
இளம் நுண்ணுயிரியல் (முதல்)

- சேலம் துறைமுகம் அமெரிக்காவில் உள்ளது.
- ஏழு நட்சத்திரம் கொண்ட சென்னை ஹோட்டல் அமெரிக்காவில் உள்ளது.
- நவம்பர் மாதத்தில் ரஷ்யர்கள் "அக்டோபர் புரட்சியைக்" கொண்டாடுகிறார்கள்.
- பனாமா தொப்பிகள் ஈகுவடார் நாட்டில் தயாரிக்கப்படுகின்றன.

தொகுப்பு :
எம்.ரியாசுதீன்

### தெரிந்து கொள்ளுங்கள்!

1 கிலோ கிராம் தேனின் சக்தி சுமார் 65 முட்டைகள், 13 அவுன்ஸ் பால், 10 கிலோ பச்சை பட்டாணி, 12 கிலோ ஆப்பிள், 20 கிலோ கேரட் இவைகளுக்குச் சமம்.

சந்திரனில் உள்ள மிக உயர்ந்த மலை "லியினெட்ஸ்" என்ற மலை தான். இதன் உயரம் சுமார் 35,000 அடி. இது எவரெஸ்ட்டை விட உயர்ந்தது.

தொகுப்பு :

அரு.ஆனந்த்குமார்
இளம் கணினி (நிறை)

| | | |
|---|---|---|
| விண்வெளி ஆராய்ச்சியில் முதன்முதலில் ஈடுபட்ட நாடு | - | தோவியத்ரஷ்யா |
| விண்வெளிக்கு அனுப்பப்பட்ட முதல் செயற்கைக் கோள் | - | ஸ்புட்னிக் |
| விண்ணில் பூமியைச் சுற்றிப்பார்த்த முதல் மனிதன் | - | யூரிக்காகரின் |
| விண்வெளிக்கு சென்ற முதல் பெண் | - | வாலன்டினா |
| விண்வெளியில் முதன் முதலில் நடந்தவர் | - | எட்வர்ட் வொயிட் |
| விண்வெளிக்குச் சென்ற முதல் இந்தியர் | - | ராகேஷ்சர்மா |
| சந்திரனில் முதன் முதலில் இறங்கிய செயற்கைக் கோள் | - | லூனா 9 |
| விண்வெளியில் அதிக நேரம் மிதந்த மனிதர் | - | பஜ் ஆல்பினின் (5மணி 36 நிமிடம்) |
| சந்திரனின் இன்னொரு பகுதியைக் கண்டவர் | - | வில்லியம் ஆர்டர்ஸ் |

☛ தொகுப்பு :

தெ.பிரகாஷ்
இளம் வேதியல் (இடை)

## கடல் உப்பாக இருப்பது ஏன்?

இந்தக் கேள்விக்கு இன்னும் பலபேருக்குச் சரியான பதில் தெரிந்திருக்காது. கடல் தோன்றிய காலத்தில் கடல் நீரில் இப்போது உள்ளதைபோல் அவ்வளவாக உப்பு இருக்கவில்லை. நீரானது பல்வேறு தரைப்பகுதிகளைக் கடந்து கடலுக்கு வரும்போது பல தாதுப்பொருட்களைக் கரைத்து அதனோடு சேர்த்துக்கொள்கிறது.

கடல் நீரில் ஆவியாகி, மேகமாகி மழையாகப் பொழிந்து மீண்டும் கடலையே வந்தடைகிறது. நீர் ஆவியாகும் போது அதில் கரைந்துள்ள பொருள்கள் நீரிலேயே தங்கி விடுகின்றன.

கோடிக்கணக்கான ஆண்டுகளாய் நடந்து வரும் இந்த நிகழ்ச்சியே காரணமாய் கடல் நீரில் தாதுப் பொருள் கரைசலின் அளவு அதிகரித்துவிட்டது. அந்தக் கரைசலில் பலவகை ரசாயன சேர்மானங்கள் பல அளவுகளில் இருந்தாலும், முக்கால் பங்குக்கு மேல் சோடியம் குளோரைடு (உப்பு) தான் உள்ளது. அதனால் தான் கடல் நீர் உப்புக் கரிக்கிறது.

☛ தொகுப்பு :

அரு.ஆனந்தகுமார்
இளம் கணினி (நிறை)



## வண்ணத்துப்பூச்சி

உலகில் மொத்தம் 25,000 வகையான வண்ணத்துப்பூச்சிகள் உள்ளன. ஈயின் வடிவ அளவிலிருந்து சுமார் 11 அங்குலம் நீளமான இறக்கைகள் கொண்ட இராட்சச வண்ணத்துப்பூச்சிகள் வரை பல வகையான வண்ணத்துப் பூச்சிகள் வாழ்ந்து வருகின்றன.

☛ தொகுப்பு :

ச.மீனா
இளம் [illegible]யல் (இடை)

## நாணயங்கள்

பொதுவாக நாணயங்கள் தயாரிப்பு நட்டத்திலேயே நடைபெறுகிறது. 25 பைசா நாணயம் ஒன்று தயாரிக்க 26 பைசா செலவாகிறது. 20 பைசா நாணயம் தயாரிக்க 20.2 பைசா செலவாகிறது. 5 பைசா நாணயம் தயாரிக்க 10.3 பைசா செலவாகிறது. 5 பைசா நாணயங்கள் தயாரிப்பதையாவது நிறுத்திவிடலாம் என அரசாங்கம் ஆலோசித்து வருகிறது.

## யார் தெரியுமா?

| | | |
|---|---|---|
| சிமெண்ட் | - | ஜோசப் ஆஸ்ப்டின் (1824 - இங்கிலாந்து) |
| சினிமா | - | ஆகஸ்டே லூமியர், லூயிஸ் லூமியர் (ஃப்ரான்ஸ்) |
| டீசல் என்ஜின் | - | ருடால்ட் டீசல் (1895 - ஜெர்மனி) |
| எலக்ட்ரிக் மோட்டார் (AC) | - | நிகோலா டெஸ்லா (1888 - அமெரிக்கா) |
| எலக்ட்ரிக் மோட்டார் (DC) | - | ஸெனோப் கிராம்மே (1873 - பெல்ஜியம்) |
| எலக்ட்ரிக் கம்ப்யூட்டர் | - | ஜெ.ஜி.பிரெய்னொர்டு, ஜெ.பி.எக்கர்ட், ஜெயுள்யுமாச்லி (1942 - அமெரிக்கா) |

☛ தொகுப்பு :

எம்.ஜெகபர் சாதிக்
இளம் மின்னணுவியல் (இடை)

# AGNI BOOKS

Raj Buildings, Mayiladuthurai.

School, College, Polytechnic, Engineering, Text Books, Guides, General Books.

# ADITYA BOOKS

S.M.H. Building, Opp: A.V.C.College, Mannampandal.

College, Polytechnic, Engineering: Text Books, Guides, Note Books & Stationery.

**Project Binding - Comb & Spiral**

# NATIONAL OPTICALS

**31, Cutchery Road, Mayiladuthurai.**
**(opp. to UNION CLUB) Ph: 226660.**

- Complete vision care under one roof.
- Eye testing on the computerised equipment by an experienced optometrist.
- Latest fashanable imported frames.
- Corrective and colour cosmetic contact lenses.
- Sun glasses

**and** ***Much More ..... Kindly Visit us***

**R. SIVANANDHAM** D.OPT., P.M.O.A.,
**CONSULTANT OPTOMETRIST.**

**We are opening on Sundays (Morning)**









உணவு விடுதியை ஒரு தவமாகவே எண்ணித்
தொழிலில் நேர்மையையும் உண்மையையும்
விருந்தோம்பலில் கனிவையும் கலந்து, தங்கள்
ஒவ்வொருவரையும் எங்களின் சிறப்பு விருந்தினராக
ஏற்று உபசரிப்பதே எங்களின் குறிக்கோள் ஆகும்.

என்றும் அன்புடன்...

**பெரி. இராசேந்திரன்**

**கற்பகம் செட்டிநாடு உணவகம்,**

60-61 மகாதானத் தெரு,
மயிலாடுதுறை - 609 001.
தொலைப்பேசி : 224654

# இளந்தூது

அறிந்து பரப்பி ஆக்கம் செய்குவோம்

ஒருங்கிணைப்பாளர் : முனைவர் **துரை.குணசேகரன்** (தமிழ்ப்பேராசிரியர்)

## ஆசிரியர் குழு

| | |
|---|---|
| ஆசிரியர் | : **ஜெ.ரகுநாத்**, இளம் வணிகம் (நிறை) |
| இணையாசிரியர் | : **ச.பி.செந்தில்நாதன்**, இளம் வணிகம் (நிறை) |
| துணைஆசிரியர்கள் | : **ச.செந்தில்**, இளம் தாவரம் (நிறை) |
| | **தே.சியாமளா**, இளம் மின்னணுவியல் (நிறை) |
| வரை கலைஞர் | : **ச.பி.செந்தில்நாதன்**, இளம் வணிகம் (நிறை) |
| சிறப்பு ஆலோசகர்கள் | : **மு.செந்தில்குமார்**, முதுநிலை கணிப்பொறி பயன்பாட்டியல் (நிறை) |
| | **கி.கீதா**, முதுநிலை கணினிப் பயன்பாட்டியல்(நிறை) |
| | **பா.இன்பநிலா**, முதுநிலை வேதியல் (முதல்) |
| உறுப்பினர்கள் | : **ம.விக்னேஷ்வரன்**, இளம் வேதியல்(இடை) |
| | **தே.கணேஷ்பிரபு**, இளம் வணிகம் (இடை) |
| | **இர.பிரியதர்ஷிணி**, இளம் மின்னணுவியல் (இடை) |
| | **க.இராஜலெட்சுமி**, இளம் மின்னணுவியல் (இடை) |

படைப்புகளைத் திருத்தவோ, சுருக்கவோ ஆசிரியர்குழுவிற்கு உரிமை உண்டு.

உங்கள் படைப்புகள், விமர்சனங்கள் இளந்தூது மின்அஞ்சல் ilanthoodhu@rediffmail.com மூலமும் அனுப்பலாம்.

**இளந்தூது**
(மாணவர் இதழ்)
அ.வ.அ.கல்லூரி, (தன்னாட்சி)
(தனிச்சுற்றுக்கு மட்டும்)
மன்னம்பந்தல் - 609 305, மயிலாடுதுறை.
ilanthoodhu@rediffmail.com

**அன்னை அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடுவோர்**
**ஏ.வி.சி. கல்லூரி மாணவர்கள்.**







கல்லூரிப்
பூந்தோட்டத்தில்
புது மலராய்ப்
பூத்திருக்கும்
முதலாம் ஆண்டு
மாணவர்களை
இளந்தூது
ஆசிரியர் குழு
சந்தித்ததல்லவா?



அவர்களின்
எண்ணங்களை
உள்ளே
வாசித்திருப்பீர்கள்.
இதோ
அவர்களின்
வண்ணங்கள் . . .





ENTER HERE CLICK ANYWHERE

**SISI** GOVT. OF. INDIA
COMPUTER TRAINING CENTRE

**MINISTRY OF SISI, CHENNAI.**

*Invites Applications for Training in Computers*

Master Diploma in Information Technology (MDIT)
Duration : 24 Months (Part Time) 12 months (Full time)

Honours Diploma in Software Engineering (HDSE)
Duration : 18 months (prat time) 9 months (Full time)

PG / Diploma in Computer Application (PG/DCA)
Duration : 12 months (part time) 6 months (Full time)

Advanced Diploma in computer Hardware & Networking
Duration : 4 months (part time) 2 months (full time)

PG/Diploma in Computer Hardware & Software
Duration : 10 months (Part time) 5 months (full time)

Masters Diploma in Networking
Duration : 4 months (part time) 2 months (full time0

Diploma in Computer Accountancy
Duration : 3 months (part time) 6 weeks (full time)

Diploma in AutoCad 2K
Duration : 3 months (part time) 6 weeks (full time)

Masters Diploma in E.commerce (MDEC)
Duration : 6 months (part time) 3 months (full time)

Diploma in Client Server Technology (DCST)
Duration : 6 months (part time) 3 months (full time)

Diploma in Java & Internet Programming (DJIP)
Duration: 6 months (part time) 3 months (full time)

Diploma in Computer Hardware & Software (DCHS)
Duration : 10 months (part time) 5 months (full time)

**CONCESSION**
50% Concession For SC/ST & PH
10% Concession for Women

**NOW UPTO 50% DISCOUNT**

*For application & further details contact :*

**1-B-1, State Bank Road, Mayiladuthurai.**
☎ : 242939 (04364) Cell : 98424 - 72004

PHONE NO: 226625

# GIFT CORNER

5H, Narayana Pillai Lane,
Mayiladuthurai 609 001.





All types of All types of
**GIFTS**
Children **TOYS**
All Occasion **GREETINGS**

**SILVER** Gift Items
**LADIES** Crystel Chain Items

## மார்ச் இதழ்...

முற்றிலும் வித்தியாசமான !
உங்கள் படைப்புகளை
எங்களிடம் சேர்ப்பிக்கவும்.

செவ்வாய்யில் உள்ளவர்களை
சந்திக்க ஆசையா?
இதுபோல் உங்கள் சிந்தையை
குளிரச்செய்ய !
எத்தனை எத்தனையோ
காத்திருக்கின்றன...
நீங்களும் காத்திருங்கள்
மார்ச் வரை.